பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 24 புதன்கிழமை 08.03.2023 கதிர் 119




# பல்கலை மாணவர் போட்டத்தால் நேற்று சமர்க்களமானது கொழும்பு

## சட்டபீட வளாகத்திற்குள் பொலிஸார் நுழைந்ததால் களேபரம்

**அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் செவ்வாய்க்கிழமை நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணின்போது மாணவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்களால் கொழும்புப் பல்கலைக் கழக சட்டபீட வளாகம் சமர்க்களம் போன்று காட்சியளித்து. பொலிஸார் மாணவர்கள் மீது கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதலை நடத்த, அதனை அவர்கள் திருப்பி பொலிஸார் மீதே வீசி பதில் தாக்குதல் நடத்தினர். அத்தோடு கற்களை எடுத்து வீசியும் தாக்குதல் நடத்தினர்.**

2

## இனி இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தினத்தை 5 மாதங்களுக்கு முன்பே தேர்தல்கள் ஆணைக்குழுவால் அறிவித்திருக்க முடியும். ஆனால் கடைசி நேரம் வரையில் அது இழுத்தடித்தது. ஆட்சியாளர்களுக்கு ஆதரவாகவே இந்த இழுத்தடிப்பு என்கிற சந்தேகம் அப்போதே எழுந்தது. அது தொடர்பில் பல தரப்புக்களில் இருந்தும் அழுத்தங்கள் அதிகரித்த நிலையில் கடைசித் தருணத்தில் தேர்தல் திகதியை அறிவித்தது.

அதன் பின்னர் திறைசேரி செயலாளர் நிதியை விடுவிக்க மாட்டேன் என்றது, அரச அச்சகப் பணிப்பாளர் நிதி தராமல் வாக்குச் சீட்டு அச்சிடமாட்டேன் என்று தெரிவித்தது, அதனால் தபால் மூல வாக்களிப்பை நடத்த முடியாமல் போனது எல்லாம் வாசகர்களுக்குத் தெரியும். இப்போது மார்ச் 9ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்ட தேர்தலை ஏப்ரல் 25ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது ஆணைக்குழு.

இந்த முடிவும்கூட ஆட்சியாளர்களுக்கு ஆதரவாகவே எடுக்கப்படுகின்றது என்கிற சந்தேகம் ஆணைக்குழுவிற்கு எதிராகப் பலமாக எழத் தொடங்கியிருக்கிறது. எதிர்க்கட்சிகள் எல்லாம் இணைந்து, சட்ட ஏற்பாடுகளின்படி மார்ச் 19ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தின. ஆனால் ஆணைக்குழுத் தலைவர் அதற்கு மறுத்துவிட்டார். காலம் போதாது என்றார் அவர்.

திறைசேரிச் செயலாளருடனோ 2

## பொருளாதாரத்தை மீட்க எம்முடன் இணையுங்கள்

### எதிர்க்கட்சிகளுக்கு ஜனாதிபதி ரணில் மீண்டும் பகிரங்க அழைப்பு

நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்கான பயணத்தில் தம்முடன் இணைந்து கொள்ளுமாறு எதிர்க்கடசியினருக்கு மீண்ட என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை மீண்டும் பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார்.

பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கண்ட பின்னர் ஜனாதிபதி தேர்தலா பொதுத் தேர்தலா எது தேவை 2

## பணியாளர் நிலை ஒப்பந்தம் நிதியம் மார்ச் 20 பரிசீலனை

இலங்கைக்கு கடன் வழங்கிய அனைத்து கடன்வழங்குனர்களி;டம் இருந்தும் கடன் மறுசீரமைப்புக்கான உறுதிப்பாட்டுக் கடிதங்களை எழுத்து மூலமாகப் பெற்றுள்ள நிலையில், இலங்கையின் பணியாளர் நிலை ஒப்பந்தம் மார்ச் 20ஆம் திகதி நிறைவேற்று சபையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: 2

## நேற்றைய போராட்டம் வெறும் ஒத்திகையே

### வசந்த முதலிகே அறிவிப்பு; ரணிலின் உரை பற்றியும் எகத்தாள கருத்து



ரணிலின் சண்டித்தனமான நாடாளுமன்ற உரையானது எமக்கு நாய் முனகுவதைப் போன்றே இருந்தது என்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே தெரிவித்தார்

தமது அமைப்பினரால் முன்னெடுக்கப்பட்ட நேற்றைய போராட்டம் வெறும் ஒத்திகையே என்றும் எதிர்வரும் நாட்களில் போராட்டம் தொடரும் என்றும் அவர் பகிரங்கமாக அறிவித்தார். 2

## ஜனநாயகத்தைப் பாதுகாக்க உடன் தேர்தலை நடத்துங்கள்

### நாடாளுமன்றில் சஜித் வலியுறுத்து

ஜனநாயகத்தைப் பாதுகாக்க உடனடியாக உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துங்கள் என்று அரசிடம் கோருகின்றோம்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் உரையாற்றும் போது மேலும் தெரிவித்ததாவது:

இந்நாட்டிலுள்ள உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களின் 2



## ஜனாதிபதி உரை மீது 2 நாட்கள் விவாதம்

### கோருகின்றார் எதிர்க்கட்சித் தலைவர்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை ஆற்றிய உரை தொடர்பில் இரு நாட்கள் விவாதம் அவசியம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

## பெரமுன எம்பிக்கள் கூடி ஆராய்வு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவணசர கலந்துரையாடலொன்றில் ஈடுபட்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் சமல்ராஜபக்ஷ, பஷில் ராஜபக்ஷ, உள்ளிட்ட அனைத்து நாடளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்றுள்ளனர்.

இதன்போது, பொருளாதார நெருக்கடி, வரவிருக்கும் உள்ளுராட்சி மன்றத் தேர்தல்கள் மற் றும் ஆட்சியை 2

## கல்முனை வடக்குப் பிரதேச செயலக சிக்கலை தீர்க்க சாணக்கியன் காலக்கெடு

### இன்றுக்குள் கணக்காளரை நியமிக்க வலியுறுத்து

(அகீல்)

இன்றைய தினத்திற்குள் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு கணக்காளரை நியமிக்கவேண்டும். அவ்வாறு நியமிக்கப்படவில்லை என்றால் எதிர்த்து நடவடிக்கை எடுப்போம் என அரசுக்குக் காலக்கெடுவழுங்கியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்கிழமை உரையாற்றிய போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் என்பது 1993ஆம் ஆண்டு வர்த்தமானி ஊடாக பிரதேச செயலகமாக அறிவிக்கப்பட்ட ஒரு பிரதேச செயலகம். 8

## மேலும் குறைந்தது தங்கத்தின் விலை

இலங்கையில் தங்கத்தின் விலை மேலும் குறைவடைந்துள்ளது.


இதற்கமைய நேற்று 24 கரட் தங்கம் ஒரு பவுணின் விலை 2

## படகு கவிழ்ந்ததில் மீனவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை – அரசடி ஆற்றில் படகு கவிழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 2

## சாணக்கியன் பொய் சொல்கிறார் ஐக்கிய காங்கிரஸ் போர்க்கொடி



கல்முனை வடக்கு பிரதேச செயலகம் என்ற பெயரில் செயலகம் ஒன்று இல்லாத நிலையில் அப்படியொன்று இருப்பதாக தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் பொய் சொல்லி தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் இனக்குரோதத்தை உருவாக்குவதற்கு முயற்சி செய்வதாக ஐக்கிய காங் கிரஸ் கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது பற்றி ஐக்கிய காங்கிரஸ் கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்திருப்பதாவது,

1993ஆம் ஆண்டு முதல் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் இயங்குவதாக சாணக்கியன் உரையாற்றியுள்ளார். கல்முனையில் இன்று வரை இருப்பது கல்முனை செயலகம் என்ற ஒரேயொரு செயலகம்தான். கல்முனையில் 2

## வீரகெட்டியவில் 6 பேர் கைது

வீரகெட்டிய, அத்தனயால பகுதியில் சோதனை நடவடிக்கையின் போது பொலிஸ் அதிகாரிகள் சிலரைத் தாக்கிய குற்றச்சாட்டில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இளைஞர்கள் குழுவொன்றைச் சோதனை செய்ய முற்பட்ட போது பொலிஸார் மற்றும் 2



## சீனாவின் கடன் உறுதிப்பாட்டுக் கடிதத்தை கையளித்தார் அந்நாட்டின் பிரதித் தூதுவர்

சீனாவினுடைய எக்சிம் வங்கியின் கடன் உறுதிப்பாட்டுக் கடிதத்தினை இலங்கைக்கான சீன பிரதிதூதுவர் ஹவெய் உத்தியோக பூர்வமாக கையளித்துள்ளார்.

நேற்றுப்பிற்பகல் அவசரமாக கொழும்பில் உள்ள ஜனாதிபதி செயலகத்திற்கு விரைந்த அவர், ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க முன்னிலையில் வைத்து திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தனவிடத்தில் கடிதத்தைக் கையளித்தார்.

அத்துடன், இலங்கையில் புதிய முதலீட்டு வாய்ப்புகளை ஆராய்வதற்காக பெருமளவிலான சீன நிறுவனங்கள் எதிர்காலத்தில் இலங்கைக்கு வருகை தருவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் பிரதி சீனத்தூதுவர் தெரிவித்துள்ளார்.

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது குறைந்தபட்சம் அரச அச்சகப் பணிப்பாளருடனோ கலந்துரையாடாமலேயே தேர்தலை மார்ச் 19க்குள் நடத்துவதற்குக் காலம் போதாது என்று அவர் அறிவித்தார். செவ்வாய்க்கிழமை எதிர்க் கட்சித் தலைவர்களைச் சந்தித்துப்பேச முன்பே அவர்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும் என்பதை அவர் தெரிவித்துவிட்டார்.

அதற்குக் காரணம் இருந்தது. புதிய தேர்தல் திகதியை முடிவு செய்வதற்காக மார்ச் 3ஆம் திகதி ஆணைக்குழு கூடியது. அன்றைய தினமே உயர் நீதிமன்றத்தின் உத்தரவும் வந்தது. தேர்தலுக்கான நிதியை யாரும் தடுக்கக்கூடாது என்று அந்த உத்தரவில் நீதிமன்றம் தெரிவித்திருந்தது. நீதிமன்ற உத்தரவு வருவதற்கு முன்பாகவே தேர்தலை எப்போது நடத்துவது என்பது தொடர்பில் ஆணைக்குழு ஒரு முடிவுக்கு வந்துவிட்டது.

ஏப்ரல் அல்லது மே மாதத்தில் தேர்தலை நடத்துவதுதான் அந்த முடிவு. நீதிமன்ற உத்தரவு வந்ததால் அந்த முடிவை அறிவிப்பதை ஆணைக்குழு ஒத்திவைத்தது. திறைசேரி செயலர், அரச அச்சகப் பணிப்பாளர், பொலிஸ் மா அதிபர் ஆகியோருடன் கலந்துரையாடிவிட்டு திகதி முடிவு செய்யப்படும் என்று அறிவித்தது.

ஆனால், ஆணைக்குழு அழைப்பு விடுத்தபடி கூட்டத்திற்கு திறைசேரிச் செயலாளர் வரவில்லை. தன்னால் வரமுடியாது என்று ஆணைக்குழுவிற்குக் கடிதம் அனுப்பியிருந்தார் அவர். தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்திற்கு அதே நேரத்தில் அவர் அழைக்கப்பட்டிருந்தார். (''நரித்தனம்'' எப்படி வேலை செய்கிறது என்று பாருங்கள்) இப்போது நிதி விடுவிக்கப்படும் என்கிற எந்த உத்தரவாதமும் திறைசேரிச்செயலாளரிடம் இருந்து கிடைக்காமலேயே புதிய தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டிருக்கின்றது. நீதிமன்ற உத்தரவு மட்டுமே இருக்கின்றது.

இதற்கு அதிகாரிகளை அழைத்துப் பேசாமல் மார்ச் 3ஆம் திகதியே தேர்தலுக்கான புதிய தினத்தை அறிவித்திருக்கலாம். ஆனால் காலம் தாழ்த்தும் விதத்தில் ஆணைக்குழு செயற்பட்டிருப்பது அது மீண்டும் ஆட்சியாளர்களுக்குச் சார்பாகவே செயற்படுகின்றதோ என்கிற சந்தேகத்தை கிளப்பத் தொடங்கியிருக்கிறது.

அத்துடன் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உள்ள அதிகாரப்படி முதல் திகதியில் இருந்து 21நாள்களுக்குள் அடுத்த தேர்தல் திகதி தீர்மானிக்கப்படவேண்டும். அதனடிப்படையில் மார்ச் 30ஆம் திகதிக்குள் தேர்தலுக்கான திகதி குறிக்கப்படவேண்டும். அதற்காகவே தபால் மூல வாக்களிப்புத் திகதியை மார்ச் 28ஆம் திகதி முதல் குறித்துள்ள ஆணைக்குழு தேர்தல் திகதியை கிட்டத்தட்ட ஒரு மாத காலம் தள்ளிப் போட்டுள்ளது. இந்த நுட்பமான நகர்த்தல் மூலம் தேர்தலைக் கிட்டத்தட்ட 2 மாதங்களுக்குப் பிற்போடப்பட்டாயிற்று.

இதுவும்கூட ஆணைக்குழு ஆட்சியாளர்கள் சார்பாகவே செயற்படுகின்றதோ என்கிற சந்தேகத்தைப் பலமடைய வைக்கிறது.

இதற்குப் பின்னரும் திறைசேரிச் செயலாளர் நிதியை விடுவிக்காமல் தேர்தலை நடத்தமுடியாத நிலையை ஏற்படுத்தினால் அதற்கு எதிராக உயர் நீதிமன்றை நாடுவது என்று எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன. ரணிலின் தந்திரங்களின் முன் இந்தச் சட்டப் போராட்டங்களின் பெறுபேறுகள் எப்படியிருக்கப் போகின்றன என்பதைப் பொறுத்திருந்து பார்ப்பேம் வாசகர்களே!

- இடிமின்னல் -

## பல்கலை மாணவர் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னதாக புஞ்சிபொரளை, கொழும்பு கோட்டை தொடருந்து நிலையம் ஆகிய இடங்களில் மாணவர்கள் கூடியிருந்தபோதும் போராட்டங்களைத் தொடங்கியிருக்கவில்லை. அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டத்திற்கு கோட்டை நீதிவான் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்திருந்த நிலையில் மாணவர்கள் காத்திருந்தனர்.

கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்திற்கு முன்னால் குழுமியிருந்த மாணவர்களை நோக்கி ஒலிபெருக்கி ஊடாக காவல்துறையினர் நீதிமன்றத்தின் கட்டளையை வாசித்னர். பின்னர் அதனை ஏற்றுக்கொள்ளுமாறு மாணவர்களை அவர்கள் கோரியபோதும் நீதிமன்றக் கட்டளையைப் பெற மறுத்துவிட்டனர். இதையடுத்து பொலிஸார் அங்கிருந்து திரும்பிச் செல்ல முனைந்தபோது, பெருங் கூச்சலிட்டு மாணவர்கள் அவர்களை வழியனுப்பினார்கள்.

இந்த நிலையில் கொழும்பு லிப்டன் சதுக்கத்திலிருந்து போராட்டத்தைத் தொடங்கிய மாணவர்கள் அங்கிருந்து தாமரைத் தடாகம் நோக்கி நகர்ந்தனர். பின்னர் சுதந்திர சதுக்க வீதி வழியாக கொழும்பு பல்கலைக்கழக சட்டவளாகப் பகுதியை அடைந்தனர்.

அந்த இடத்தில் பொலிஸாரும், கலகமடக்கும் பொலிஸாரும் பெருமளவில் முழுத் தயார் நிலையில் குவிக்கப்பட்டிருந்தனர். மாணவர்களை கலைந்து செல்லுமாறு அறிவித்தல் விடுத்தனர். எனினும் மாணவர்கள் தொடர்ச்சியாக முன்னேறிச்செல்ல முனைந்த போது, நீர்த்தாரைத் தாக்குதல் நடத்தினர். இதனால் சிதறியோடிய மாணவர்களை நோக்கி கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும் பொலிஸார் வீசினார்கள்.

இதன் காரணமாக, போராட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டவளாகத்துக்குள் நுழைந்தனர். பொலிஸா ரும் ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கி கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியவாறு பல்கலைக்கழக வளாகத்திற்குள் நுழைந்தனர். அதற்கு சட்டபீட மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனால், பொலிஸாருக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் அதிகரித்து பதற்றம் ஏற்பட்டது. இதற்கிடையில், ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்த மாணவர்கள் தம்மீது ஏவப்பட்ட கண்ணீர்ப் புகைக்குண்டுகளைக் கைப்பற்றி பொலிஸார் மீது திருப்பி வீசத் தொடங்கினர். இதனால் மீண்டும் பொலிஸார் நீர்த்தாரைத் தாக்குதல் மற்றும் கண்ணீர்ப்புகைக்குண்டு தாக்குதல்கள் மேற்கொண்டனர்.

அத்துடன், கலகமடக்கும் பொலிஸாரும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டபீட வளாகத்தினைச் சூழ்ந்துகொண்டனர். இந்தச் சமயத்தில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டபீட வளாகத்தில் இருந்து போராட்டத்தில் பங்கேற்ற மாணவர்கள் கற்களைக் கொண்டு பொலிஸாரை தாக்கத் தொடங்கினர். இதனால் நிலைமைகள் மோசமடைந்தன.

இந்தச் சூழலில் கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் நிர்வாகிகள் மற்றும் ஆசிரியர்கள் சம்பவ இடத்திற்கு வநது, பல்கலைக்கழக வளாகத்திலிருந்து பொலிஸாரை வெளியேறுமாறு கோரியதோடு, தாக்குதல்களை நிறுத்துமாறும் வலியுறுத்தினர்.

உடனடியாக, தவறு நடந்திருந்தால் மன்னித்துக்கொள்ளுமாறு கூறிவிட்டு பொலிஸார் அங்கிருந்து வெளியேறினர். எனினும், போராட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்கள் பொலிஸாரை நோக்கி கூக்குரல் எழுப்பிக் கூச்சலிட்டனர்.

ஆர்ப்பாட்டங்களை அடக்குவதற்கு வரவேண்டாம். உங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவும் தான் போராடுகின்றோம் என்றும் அவர்கள் பொலிஸாரைப் பார்த்துத் தெரிவித்ததோடு, நீர்த்தாரை வாகனங்களையும் பின்தள்ளி விட்டனர்.

## பொருளாதாரத்தை மீட்க ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதைத் தீர்மானிக்க முடியும். அதுவரை நீங்கள் காத்திருக்கத் தயாரா இல்லையா என்று கேட்கிறேன். உங்களுக்கு இதை ஏற்கவோ நிராகரிக்கவோ முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொருளாதாரத்தின் தற்போதைய நிலை மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்களின் முன்னேற்றம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமூகத்தில் செல்வாக்கு மிக்க குழுக்கள் நாம் முன்வைத்த வேலைத்திட்டத்தை பல்வேறு நடவடிக்கைகள் மூலம் நாசமாக்கினால், அதிலிருந்து உருவாகும் சமூக மாற்றம், மிகவும் ஆபத்தானதாக இருக்கும். இது நம் சமூகத்தில் முன்னெப்போதும் இல்லாத சோகமான காலத்திற்கு வழிவகுக்கும்.

கருத்துக்களை வெளியிடும் உரிமையை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதனை அமைதியாக செய்யுங்கள். கூட்டங்கள் நடத்துவதும், போராட்டம் நடத்துவதும் ஒரு பிரச்சினையல்ல. ஆனால், இந்தப் போராட்டத்தின் மூலம் இந்த வேலைத்திட்டத்தை சீர்குலைத்தால், அதற்கு எதிராக இந்த அரசாங்கம் கடுமையாகச் செயற்படும்.

நான் ஒன்று சொல்ல வேண்டும், இப்போது டொலருக்கான விலை குறைந்து வருகிறது. ஜூலை 9ஆம் திகதி இந்த நாடு வீழ்ந்திருந்தால் இன்று இந்த நிலை இருந்திருக்காது. அப்போது யாரின் உதவியும் இருக்கவில்லை. இதற்கு நடவடிக்கை எடுத்த முப்படை மற்றும் பொலிஸாருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் எடுத்த அந்த நடவடிக்கையால்தான் இன்று நமக்கு எரிபொருளும் மின்சாரமும் கிடைத்துள்ளது. எனவே, அந்த சக்திகளுக்கு இந்த நிலைமையை தகர்க்க அனுமதிக்க மாட்டோம்.

குறிப்பாக ஜூன் நடுப்பகுதிக்குள் நாட்டின் வருமான நிலைமையை குறித்துக் கருத்தில் கொள்ளவேண்டும். அதிலிருந்து முடிவுகளை எடுக்கலாம். குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதி கிடைத்தவுடன் ஒப்பந்தத்தை சபையில் சமர்ப்பித்து முன்மொழிவொன்றை கொண்டு வருவேன். அதை ஏற்பதா இல்லையா என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள். இன்றேல் எங்களுக்கு மாற்று வழியைத் தாருங்கள்.

அதன் பிறகு எதிர்கால பயணம் மற்றும் திட்டங்கள் தொடர்பில் நாம் புதிய வரைபு ஒன்றைச் சமர்ப்பிக்க இருக்கிறோம். அதனைத் தேசிய சபைக்கும் வழங்குவோம். நாடாளுமன்றத்தில் ஆராய்ந்து உடன்பாடு எட்டப்பட்ட பிறகு நீண்ட கால மற்றும் நடுத்தர கால திட்டத்தை முன்வைப்பேன்.

தற்போது, நாடளுமன்றத்தின் தேசிய சபைக் குழுக்களிடமிருந்து பல அறிக்கைகள் கிடைத்துள்ளன. அதற்கு நான் நன்றி தெரிவிக்கிறேன். ஆனால் 08 மாதங்கள் என்ற குறுகிய காலத்திற்குள் இப்பணியை எங்களால் முடிக்க முடிந்தது. அதைப் பயன்படுத்திக் கொண்டு முன்னேறுவோம் - என்று ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்தார்.

## பணியாளர் நிலை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்குமான பணியாளர் நிலை ஒப்பந்தம் கடந்த ஆண்டு செப்டெம்பர் முதலாம் திகதி எட்டப்பட்டிருந்தது. இந்த நிலையில், தற்போது இலங்கையின் இருதரப்பு கடன் வழங்குனர்கள் அனைவரும் தமது மறுசீரமைப்புக் கடிதங்களை அனுப்பியுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர் நிலை ஒப்பந்தத்திற்கான, நிறைவேற்று சபையின் அங்கீகாரமானது, உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட ஏனைய கடன் வழங்குநர்களிடம் இருந்து நிதியுதவியை இலங்கை பெற்றுக்கொள்வதற்கு ஊக்குவிக்குவிப்பதாக இருக்கும்.

அத்துடன், இலங்கை தற்போதைய நெருக்கடியிலிருந்து மீண்டு வலுவான வளர்ச்சியின் பாதையில் தன்னை தகவமைத்துக்கொள்வதற்கும் உதவுவதாக இருக்கும். மேலும் இலங்கை ஏற்கனவே மேற்கொண்டுள்ள சீர்திருத்தங்களுக்கான வேலைத் திட்டங்களுக்கும் இந்த ஏற்பாடு ஆதரவளிக்கும் என்று சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

## படகு கவிழ்ந்ததில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கந்தப்பர் வெள் ளைத்தம்பியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இறால் பிடிப்பதற்காகச் சென்றிருந்த வேளையில் திடீரென வீசிய பலத்த காற்றால் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால் நீரில் மூழ்கிய வெள்ளைத்தம்பியை ஏனைய மீனவர்கள் மீட்டு மகிழடித்தீவு வைத்தியசாலையில் சேர்த்தனர். எனினும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## சாணக்கியன் பொய் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு செயலகம் என்றோ, தமிழ் செயலகம் என்றோ முஸ்லிம் செயலகம் என்றோ செயலகங்கள் இல்லை. கல்முனை செயலகத்தின் கீழ் உப செயலகம் ஒன்றே உள்ளது.

ஒரு பொய்யை பல தடவைகள் சொன்னால் அது உண்மையாகிவிடும் என்ற தந்திரத்தில் தமிழ் அரசியல்வாதிகள் தொடர்ந்தும் இப்பொய்யைச் சொல்லி வருகிறார்கள்.

நாய்க்கு எங்கு அடிபட்டாலும் காலை தூக்கி கத்துவது போல் நாட்டில் என்ன பிரச்சினை ஏற்பட்டாலும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கல்முனை பற்றி கத்தி நாட்டு பிரச்சினையை திசை திருப்புவர். அது போல் கல்முனை மாநகர சபை ஊழல் பற்றி நாடு பேசுகையில் அதனைத் திசைதிருப்புவதற்காக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரவூப் ஹக்கீமால் ஏவப்பட்டுள்ளார்களா என்ற சந்தேகமும் ஏற்படுகிறது.

ஆகவே இனியும் இல்லாத ஒரு செயலகத்தை உள்ளது எனச் சொல்லித் தமிழ் மக்களை உசுப்பேற்றுவதைத்தவிர்த்து கல்முனை தமிழ் மக்களுக்காக ஐக்கிய காங்கிரஸ் கட்சியினால் பிரேரிக்கப்பட்ட பாண்டிருப்பு, சேனைக்குடியிருப்பு செயலகம் ஒன்றை உருவாக்க முன்வரும்படி தமிழ் கட்சிகளை நாம் கேட்டுக்கொள்கிறோம் - என்றார்.

# தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயல்களில் அரசு தலையிடாது

## உறுதியளிக்கிறார் பிரதமர்

தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் நாம் தலையிடப் போவதில்லை. உயர்நீதிமன்றத்தின் இடைக்காலத் தடையுத்தரவுக்கு அமைய அரச அதிகாரிகள் செயற்படுவார்கள்.

இவ்வாறு பிரதமரும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார். நிலையியல் கட்டளையின் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார் பிரதமர். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டம் கூடவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்ட விடயம் அடிப்படையற்றது. ஜனாதிபதி தலைமையில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை காலையும் தேசிய பாதுகாப்புச் சபை கூடுகின்றது.

திறைசேரியின் செயலாளர் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்குச்செல்வதைத் தடுப்பதற்காகவே அவர் தேசிய பாதுகாப்புச் சபைக்கு அழைக்கப்பட்டுள்ளார் என எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிடுவதும் அடிப்படையற்றது. தேசிய பாதுகாப்புச் சபைக்கு அழைப்பு விடுக்கப்பட்டால் அதனை அவர் மறுக்க முடியாது.

தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்த அழைப்பு தொடர்பில் திறைசேரியின் செயலாளர் ஆணைக் குழுவுடன் பேசி ஒரு தீர்மானத்தை எடுப்பார்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் என்ற ரீதியில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுடன் பலமுறை பேச்சு நடத்தினேன். தேர்தல் திருத்தச் சட்டம், தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு பல யோசனைகளை முன்வைத்துள்ளது. சுதந்திரமான முறையில் தேர்தலை நடத்தும் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது அரசின் பொறுப்பு.

கட்டுப்பணம் ஏற்றல் பணியில் இருந்து மாவட்ட செயலாளர்களை விலகிக் கொள்ளுமாறு அறிவிக்கும் தீர்மானத்தை அமைச்சரவை எடுக்கவில்லை. தவறுதலாக வெளியிட்ட அறிக்கையைப் பொதுநிர்வாக அமைச்சர் மறுகணமே திருத்திக்கொண்டார். தேர்தல் செயற்பாடுகளுக்குத் தடையேற்படுத்த வேண்டிய தேவை அரசுக்குக் கிடையாது.

உள்ளூராட்சிசபைகளின் பதவிக் காலம் எதிர்வரும் 19ஆம் திகதியுடன் நிறைவுபெறும். உள்ளூராட்சி சபைத் தேர்தல் வாக்கெடுப்புக்கான புதிய திகதி அறிவிப்புக்கு 21நாள் காலவகாசம் வழங்கப்படவேண்டும். தேர்தல் தொடர்பில் ஆணைக்குழு ஒரு தீர்மானத்தை எடுக்கும் என எதிர்பார்க்கின்றோம். தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் நாம் தலையிடப் போவதில்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தல், மக்களின் ஜனநாயக வாக்குரிமை தொடர்பில் தற்போது போர்க்கொடி தூக்குபவர்கள் மாகாண சபைத் தேர்தலை மறந்து விட்டார்கள். கடந்த அரசு மாகாண சபை திருத்தச் சட்டத்தை உருவாக்கி மாகாண சபைத் தேர்தலை முழுமையாக இல்லாதொழித்துள்ளது. ஆகவே, மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளமைக்குத் தற்போதைய எதிர்க்கட்சிகள் பொறுப்புக் கூற வேண்டும் என்பதை நாட்டு மக்கள் அறிவார்கள் - என்றார்.

## ஜனநாயகத்தைப் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவிக் காலம் இவ்வருடம் மார்ச் மாதத்துடன் நிறைவடையவுள்ள போதிலும், தற்போதைய அரசின் மீது மக்கள் கொண்டுள்ள அதிருப்தியை மூடி மறைக்க அரசு தொடர்ந்தும் தேர்தலை ஒத்திவைக்கக் கடுமையாக முயற்சித்து வருகின்றது.

தேர்தலை நடத்தாமல் தடுக்க இதுவரை சுமார் 22 விதமான கூட்டுச் சதிகளை அரசு கையாண்டுள்ளது.

அந்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்த நிலையில், தேர்தலை நடத்துவதற்கு நிதியை வழங்காமல் இருப்பதுதான் அரசின் கடைசி முயற்சியாகத் தெரிகின்றது. இது ஜனநாயகத்தை நசுக்கும் விடயமாகவும் அமைந்துள்ளது - என்றார்.

## மேலும் குறைந்தது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு இலட்சத்து 76 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

அத்துடன் 22 கரட் தங்கம் ஒரு பவுணின் விலை ஒரு இலட்சத்து 61ஆயிரத்து 950 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

மேலும், 21கரட் தங்கம் ஒரு பவுணின் விலை ஒரு இலட்சத்து 54 ஆயிரத்து 600 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

இதேவேளை, தங்கத்தின் விலையானது மேலும் குறைவடையலாம் என்று பொருளியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

## பெரமுன எம்பிக்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னோக்கி நகர்த்தும் வழி ஆகியவற்றில் பொதுஜன பெரமுனவின் எவ்வாறு உதவ முடியும் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## வீரகெட்டியவில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர்கள் இடையில் வாய்த்தர்க்கம் வலுப்பெற்றதை அடுத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலின் போது 2 உப பொலிஸ் கண்காணிப்பாளர்கள் (சப் இன்ஸ்பெக்டர்கள்), 2 சார்ஜன்ட்கள், 2 கான்ஸ்டபிள்கள், 2 கிராம பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் இருவரும் காயமடைந்தனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்தூவ தெரிவித்துள்ளார்.

இதன்போது இளைஞர் ஒருவர் உப பரிசோதகர் ஒருவரின் இரு காதுகளையும் கடித்துள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த உப பரிசோதகர் மேலதிக சிகிச்சைக்காக கராப்பிட்டி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

## நேற்றைய போராட்டம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்திற்கு அருகில் நிகழ்ந்த பதற்றமான சூழலின் பின்னர் செய்தியாளர்களிடம் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் ஜனநாயகத்திற்காகப் போராடுகின்றோம். உண்மையான மாற்றத்தினை ஏற்படுத்துவதற்காகப் போராடுகின்றோம். பொலிஸாருக்கோ, படையினருக்கோ எதிராகப் போராடவில்லை. அவர்களின் குடும்பத்தினரின் எதிர்காலத்திற்காகவே போராடுகின்றோம்.

அவர்கள் தமக்கு எதிராகப் போராடுவதாக நினைத்துக்கொண்டு எம்மைக் கண்மூடித்தனமாகத் தாக்குகின்றார்கள். எவ்வாறான தாக்குதல்களை அவர்கள் நிகழ்த்தினாலும் நாம் அஞ்சப்போவதில்லை.

இன்று காலையில் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் சண்டியரைப் போன்று உரையாற்றிக்

(08ஆம் பக்கம் பார்க்க)



# ஏனைய பரீட்சைகளும் தாமதம் அடையலாம்!

## ஜோசப் ஸ்டாலின் எச்சரிக்கை

உயர்தரப் பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் தொடங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தால், ஏனைய பரீட்சைகளும் அட்டவணைப் படுத்தப்பட்ட திகதிகளில் நடைபெறாமல் தாமதமாகலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாளாந்த ஊதியம் 2 ஆயிரம் ரூபாய் என வரம்புக்குட்படுத்தப்பட்டதன் காரணமாக ஆசிரியர்கள் மதிப்பீட்டு பணிக்கு விண்ணப்பிக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆசிரியர்களின் விண்ணப்பம் தாமதமாகலாம் என்பதால் கொடுப்பனவை அதிகரிக்க வேண்டும் என்பதை அரசாங்கம் தெரிந்துகொள்ள வேண்டும்



என ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்கு விண்ணப்பங்களை மேற்கொள்ள இன்று வரை பரீட்சை திணைக்களம் அவகாசம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிலநடுக்கம் தொடர்பில் மட்டக்களப்பில் கருத்தரங்கு






(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் பேரிடர் உதவிகள் சேவை உத்தியோகத்தர்களுக்கு நில நடுக்கம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் திருமதி கலாமதி பத்மராஜாவின் வழிகாட்டுதலின் கீழ் மாவட்டப் பேரிடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.சியாத் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

உலகலாவிய ரீதியிலும், தேசிய ரீதியிலும் நிலநடுக்கத்தின் தாக்கம் உணரப்படுவதனால் நில நடுக்கம் தொடர்பான அடிப்படையான விடயங்களை சமூகத்திற்கு கொண்டு சேர்க்க வேண்டியதன் அவசியத் தன்மை தொடர்பில் இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

கிழக்கு பல்கலைக்கழக புவியியல் பிரிவின் மூத்த விரிவுரையாளர் ஆர்.கிருபராஜாவினால் சிறந்த முறையில் வளவாண்மை மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 20 பேரடங்கிய கடற்கொள்ளையர்களால் வெலிகம மீனவர் மீது கோரத் தாக்குதல்

## 1,000 கிலோ மீன்கள் பறிமுதல்

வெலிகம, பத்தேவத்த மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற மீனவர்கள்மீது 20 பேர் கொண்ட கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியதுடன், மிரிஸ்ஸ கடலில் வைத்து அவர்களது 1,000 கிலோ மீன்களை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் என வெலிகம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இரண்டு படகுகளில் வந்த கடற்கொள்ளையர் குழுவொன்றே கடற்கரையிலிருந்து கடலின் சுமார் 6 மைல் தொலைவில் வைத்து மீன்களை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பத்தேவத்த மீன்பிடிப் படகில் மீன்பிடிக்க சென்ற லக்கிராப் என்ற மீன்பிடி படகிலிருந்த மீன்களே கொள்ளையிடப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் வெலிகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தீவிரமடையும் தொலைபேசி கடத்தல் பில்லியன் கணக்கில் டொலர் இழப்பு

நாட்டில் பெருமளவிலான கையடக்கத் தொலைபேசி கடத்தல் இடம்பெறுவதாக சட்டத்தரணி நாகானந்த கொடித்துவக்கு குறிப்பிட்டுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் கையடக்கத் தொலைபேசிகளை நாட்டுக்குள் கொண்டுவருவதன் மூலம் பில்லியன் கணக்கான டொலர்கள் மோசடி செய்யப்படுகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வெளிநாடுகளில் பழுதடைந்துள்ள பயன்படுத்திய தொலைபேசிகள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு திருத்தப்பட்டு புதிய தொலைபேசிகளாக விற்பனை செய்யப்படுவதாகவும் அவர் கூறினார்.

# கணவனின் கத்திக் குத்தில் கெற்பேலி மனைவி காயம்

தென்மராட்சி, மார்ச் 8

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெற்பேலிப் பகுதியில் செவ்வாய்க்கிழமை காலை கணவனின் கத்திக் குத்திற்கு இலக்காகி பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

கணவன் - மனைவிக்கு இடையே இடம்பெற்ற வாய்த் தர்க்கம் முற்றிய நிலையில் கத்திக்குத்து இடம்பெற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் 38 வயதான பெண் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# நாடாளுமன்றம் வந்த செருப்புகள்

## திலீபனின் பேச்சால் சர்ச்சை

சுமந்திரனின் செருப்பை சாணக்கியன் நக்கினார் என நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சாணக்கியன் மூன்று மொழிகளிலும் நன்றாகப் பேசுகிறார். ஆனால் அவர் கலப்படமானவர். அப்படி இருந்துகொண்டு மற்றவர்களைப் பற்றி பேசுவது நகைப்பாக உள்ளது என பலவாறு சாணக்கியனை பேசினார்.

முன்னதாக வன்னி மாவட்டத்தில் ஏதோ தவறுதலாக நாடாளுமன்றம் வந்தவர்கள். அந்த நாள்களில் இருந்து ராஜபக்ஷக்களின் செருப்பை நக்கிக்கொண்டு இருப்பவர்கள் எல்லாம் சொல்வதை பற்றி நான் கணக்கெடுக்கப்போவதில்லை எனச் சபையில் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்திருந்தார். இதற்குப் பதிலளிக்கும்போதே திலீபன் சாணக்கியன் சுமந்திரனின் செருப்பை நக்குபவர் என்றார்.

# கட்டுப்பாட்டு விலையில் சந்தையில் முட்டை இல்லை

நாட்டில் கட்டுப்பாட்டு விலைக்கு முட்டை விற்பனை செய்யப்படாததால் அதிக விலை கொடுத்து முட்டைகளை வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக நுகர்வோர்கள் தெரிவிக்கின்றனர்.

வெள்ளை முட்டை ஒன்று 44 ரூபாவுக்கும், சிவப்பு முட்டை 46 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்ட நிலையில், முட்டை விற்பனையாளர்கள் 54 ரூபா முதல் 65 ரூபா வரை பல்வேறு விலைகளில் விற்பனை செய்து வருகின்றனர்.

அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்யப்படுவதால் நாட்டுமக்கள் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர் என நுகர்வோர் மற்றும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தூண்டல் அவசியம்

இன்று உலகப் பெண்கள் நாள். இந்தப் பெண்கள் நாள் என்பதே போராட்டத்தில்தான் தொடங்கியது.

அமெரிக்கத் தொழிற்சங்க இயக்கத்துக்கும், ரஷ்யப் புரட்சி இயக்கத்துக்கும் இதில் பங்கு உண்டு.

1975ஆம் ஆண்டுதான் இந்த நாளை உலகப் பெண்கள் தினமாக ஐக்கிய நாடுகள் அங்கீகரித்தது. ஆனால், ஒரு நூற்றாண்டுக்கு முன்பிருந்தே இந்த நாள் பெண்களுக்கு முக்கிய நாளாக உலகின் பல பகுதிகளில் இருந்து வருகிறது.

வேலை நேரத்தை குறைக்கவும், கூலியை உயர்த்தவும் வலியுறுத்தி, வாக்களிக்கும் உரிமை கோரி 15,000 உழைக்கும் பெண்கள் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் 1908 பங்குனி 8ஆம் நாள் ஒரு பேரணியை நடத்தினர். இந்த நாளை அடுத்த ஆண்டு தேசிய பெண்கள் தினமாக அறிவித்தது அமெரிக்க சோசலிஸ்ட் கட்சி.

இந்த நாளினை உலகம் முழுவதும் கடைப்பிடிக்கவேண்டும் என்ற யோசனையை முன்வைத்தவர் கிளாரா ஜெட்கின். கோபன்ஹேகனில் 1910ஆம் ஆண்டு நடந்த உழைக்கும் பெண்களின் உலக மாநாட்டில் இந்த யோசனையை முன்வைத்தார் கிளாரா. அந்த மாநாட்டில் 17 நாடுகளைச் சேர்ந்த 100 பெண்கள் கலந்துகொண்டனர்.

இதையடுத்து 1911ஆம் ஆண்டு முதல் ஆஸ்திரியா, டென்மார்க், ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகளில் பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது. இதை அடிப்படையாகக் கொண்டே 2011ஆம் ஆண்டு நூறாவது உலகப் பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது. இதனடிப்படையிலேயே இந்த ஆண்டு 112ஆவது உலகப் பெண்கள் தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது.

இருப்பினும் 1975ஆம் ஆண்டில்தான் ஐ.நா. பங்கு 8 உலகப் பெண்கள் நாள் என்று முறைப்படி அறிவித்தது. அத்துடன் ஒவ்வோர் ஆண்டின் பெண்கள் தினத்துக்கும் ஒரு முழக்கத்தையும் முன்வைத்துவருகிறது ஐ.நா. இதன்படி ஐ.நா. அறிவிப்புக்குப் பின் வந்த முதல் பெண்கள் தினத்தின் முழக்கம் சமத்துவத்தை யோசி, அறிவுபூர்வமாக கட்டியெழுப்பு, மாற்றத்துக்காக புதுமையாக சிந்தி என்பதாகும்.

துயரம்என்னவென்றால்50ஆண்டுகளாகியும்அந்தமுதலாவது கருதுகோளை முழுமையாக அடைவதற்கே இதுவரையில் மனித சமூகத்தால் முடியவில்லை என்பதுதான். அதிலும் இலங்கை போன்ற நாடுகளில் சமத்துவத்தை யோசிக்க வைப்பதற்கே இன்னும் பல தலைமுறைகள் தேவைப்படும் போல் உள்ளது.

ஒப்பீட்டளவில் பெண்களுக்கான தடைகள், சவாலக்ள இன்று குறைந்துள்ளன என்றாலும் ஆணுக்குப் பெண் சமம் என்பதை ஏற்று நடக்கும், மதித்து நடக்கும் சமூகமாக நாம் இன்னும் மாறி விடவில்லை. அதற்கான தூண்டுதல்களும் கற்றறிந்த சமூகத்திடமிருந்து சமூகத்திற்குப் பெரும் நிர்ப்பந்தமாகத் திணிக்கப்படுவதில்லை. அது போகிற போக்கில் இயல்பாக ஏற்படும் மாற்றங்களாகவே நிகழ்ந்துகொண்டிருக்கின்றது.

பெண்ணும் இந்தச் சமூகத்தின் சரிபாதி சமானமாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்கான தூண்டல் தமிழ்ச் சமூகத்தில் இன்னும் அதிகப்படுத்தப்படவும் விரைவுபடுத்தப்படவும் வேண்டும்.

இன்று உலகப் பெண்கள் நாள் என்பது பெரும்பாலும் சமூகம், அரசியல், பொருளியல் போன்ற துறைகளில் பெண்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தை கொண்டாடுவதற்கான நாளாக மாற்றமடைந்துள்ளது. அதுவும் சிறப்பானதுதான். பெண்களின் வெற்றி கொண்டாடப்படவேண்டியதுதான். அது மற்றவர்களுக்கும் உந்துதலைக் கொடுக்கும்தான். ஆனால், பாலின பாகுபாட்டை எதிர்த்து உழைக்கும் பெண்கள் நடத்திய போராட்டங்கள், வேலை நிறுத்தங்களில்தான் இந்த நாளின் வரலாற்று வேர்கள் பதிந்துள்ளன என்பதையும் பெண்கள் மறந்துவிடக்கூடாது.

முதல் உலகப்போர் நடந்துகொண்டிருந்தபோது, 1917ஆம் ஆண்டு ரஷ்யாவில் போர் வேண்டாம், அமைதியும் ரொட்டியும்தான் தேவை என்று வலியுறுத்தி பங்குனி 8ஆம் பெண்கள் போராட்டத்தைத் தொடங்கினர். நான்கு நாள்கள் நடந்த இந்தப் போராட்டம், உலக மகளிர் நாள் என்ற கருத்துக்கு உறுதியான ஒரு வடிவத்தைக் கொடுத்தது. நான்கு நாள்கள் நீடித்த இந்தப் போராட்டம் கடைசியில் ரஷ்ய முடி மன்னரான ஜார் அரியணையை விட்டிறங்குவதற்கான அழுத்தத்தை தந்தது. முடியாட்சியும் முடிவுக்கு வந்தது.

இலங்கையிலும் காணாமற்போன உறவுகளுக்காக இன்றும் முன்னணியில் நின்று போராடுபவர்களாகப் பெண்களே இருக்கிறார்கள். போராலும் புலம்பெயர்வாலும் மிக மோசமான சமூகச் சரிவைச் சந்தித்துள்ள தமிழ் இனத்தில் பல பெண்களே குடும்பத் தலைவர்களாக சமூகத்தைத் தூக்கி நிறுத்துபவர்களாகவும் பெண்களே இருக்கிறார்கள். அதிகாரத்தில் உயர் பதவிகள் வரையும் அரசியலில் உயர் பதவிகள் வரையும் பெண்கள் வகிக்கிறார்கள். அவை எல்லாம் கொண்டாடப்படவேண்டிய அதேநேரம் நாம் பயணிக்கவேண்டிய தூரம் இன்னும் அதிகம் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

# பிரதமர் பொய்யுரைத்துள்ளார் விஜித ஹேரத் சபையில் காட்டம்



கட்டுப்பணம் ஏற்றல் பொறுப்பில் இருந்துமாவட்டசெயலாளர்களைவிலக்க வேண்டும் என அமைச்சரவை தீர்மானிக்கவில்லை என பிரதமர் சபையில் பொய்யுரைத்துள்ளார்.

இந்த விடயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது, ஆகவே நாடாளுமன்ற சிறப்புரிமைகுழுஊடாகஇந்தவிடயம்தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற மோட்டார் வாகனச் சட்டத்தின் ஒழுங்கு விதிகள் தொடர்பில் வெளியான வர்த்தமானி கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில் -

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மென்மேலும் நெருக்கடிக்குள்ளாகி பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்வது அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையா கக் காணப்படுகிறது. பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கண்டு விட்டோம் என ஜனாதிபதி குறிப்பிட்டு பெருமைப்பட்டுக் கொள்கிறார்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் கிடைக்கப் பெற்றவுடன் அதனை ஓர் ஆதாரமாகக் கொண்டு உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட உலக நாடுகளிடம்கடன்பெறலாம்எனஜனாதிபதி குறிப்பிடுகிறார். பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்கு மேன்மேலும் கடன் பெறுவது பொருளாதாரப் பாதிப்பை மேலும் நெருக்கடிக்குள்ளாகும். நாட்டைத் தொடர்ந்தும் கடன் சுமைக்குள் தள்ளும்.

பொருளாதாரப் பாதிப்புக்குத் தீர்வு கண்டு விட்டோம் என அரசாங்கம் குறிப்பிடுகிறது, அவ்வாறாயின் உள்ளூராட்சி மன்றத்தேர்தலை நடத்தலாம். சட்டத்தின் பிரகாரம் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கு எதிராக அரசாங்கம் பல்வேறு சூழ்ச்சிகளை முன்னெடுத்து வருகிறது. உயர்நீதிமன்றம் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராகவேதடையுத்தரவுபிறப்பித்துள்ளது.

பொருளாதார மீட்சிக்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானங்கள் சரியா அல்லது பிழையா என்பதை அரசாங்கம் அறிந்துகொள்ள வேண்டும். மக்களின் ஆதரவு இல்லாமல் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது. ஆகவே உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த அரசாங்கம் பொறுப்புடன் செயற்படவேண்டும்.

கட்டுப்பணம் பொறுப்பேற்றல் கடமையில் இருந்து விலகுமாறு பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் மாவட்ட செயலாளர்களுக்கு விடுத்த அறிவித்தல் தீர்மானத்தை அமைச்சரவை எடுக்கவில்லை என பொது நிர்வாக அமைச்சரும் பிரதமருமான தினேஷ் குணவர்தன குறிப்பிட்டார்,ஆனால் அவ்வாறான தீர்மானம் அமைச்சரவையில் எடுக்கப்பட்டதாகத் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் வெளியிட்ட அறிக்கை தொடர்பில் பிரதமர் பொய்யுரைத்து நாடாளுமன்றத்தை தவறாக வழி நடத்தியுள்ளார் எனக் கருத வேண்டும். இந்த விடயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது, ஆகவே, இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற சிறப்புரிமை குழு ஊடாக அவதானம் செலுத்த வேண்டும். - என்றார்.

# சர்வதேச நாணய நிதியம் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை

### எதிர்க்கட்சிகளுக்கு நிதி இராஜாங்க அமைச்சர் ஷெகான் தெரிவிப்பு

பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் எடுத்த தீர்மானங்கள் வெற்றி பெற்றதையிட்டு எதிர்தரப்பினர் கலக்கமடைந்துள்ளார்கள்.

சர்வதேசநாணயநிதியத்தை முன்னிலைப்படுத்திஎதிர்தரப்பினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை.

குறுகிய அரசியல் நோக்கத்துக்காக செயற்படும் எதிர்தரப்பினரது நிலை கண்டு கவலையடைகிறோம் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்.எஸ்.எம்.மரிக்கார் சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் குறிப்பிட்ட விடயங்களுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும்கூறுகையில் -

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக அரசாங்கம் முன்னெடுத்த கடுமையான தீர்மானங்களால் தற்போது நாடு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. பிரச்சினைகள் தீர்வடைந்து செல்வதைக் கண்டு எதிர்க்கட்சியினர் அச்சமடைந்துள்ளார்கள்.

தமக்கு அரசியல் செய்வதற்கு காரணிகள் இல்லை என்பதால் பொய்யான விடயங்களை முன்னிலைப் படுத்துகிறார்கள். சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர் முன்வைத்துள்ள கருத்துக்கள் அடிப்படையற்றவை.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஊழியர்மட்ட இணக்கப்பாடு கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் எடுக்கப்பட்டது. ஊழியர் மட்ட இணக்கப்பாடு தொடர்பான முழு விவரங்கள் ஊடகங்களில் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு இந்த மாத காலத்துக்குள் கிடைக்கப்பெறும். நாணய நிதியத்தின் ஒததுழைப்பைத் தொடர்ந்து அடுத்தகட்ட பொருளாதார முகாமைத்துவத்தை மேற்கொள்ள அரசாங்கம் விசேட திட்டங்களை வகுத்துள்ளது.



நாட்டின் தற்போதைய நிதி நிலைமை தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அரசியல்செய்வதற்குதொனிப்பொருள் ஒன்று இல்லாத காரணத்தால் எதிர்க்கட்சியினர் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு விவகாரத்தைத் தமது அரசியல் தேவைக்காகப் பயன்படுத்தி பொய்யான விடயங்களை சமூகமயப்படுத்திக் கொள்கிறார்கள்.

குறுகிய அரசியல் நோக்கத்துக்காக எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் பொய்யான குற்றச்சாட்டுக்களையிட்டு கவலையடைகிறோம். - என்றார்.

### நெருக்கடியான சூழ்நிலையில்

# அக்கறையுடன் உதவும் நாடுகள் கிடைத்திருப்பது எமது பாக்கியம்

### அமைச்சர் அலி சப்ரி பெருமிதம்



மிகவும் நெருக்கடியான தருணத்தில் உள்ளபோது அக்கறையுடன் உதவும் நட்புநாடுகள் கிடைக்கப்பெற்றிருப்பது இலங்கையின் அதிஷ்டம் என்று குறிப்பிட்டுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, தற்போதைய சூழ்நிலையில் அவசியமான அனைத்து உத்தரவாதங்களுடனும் முன்நோக்கிப் பயணிப்பது சிறந்ததாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் 2.9 பில்லியன் கடனுதவியைப் பெற்றுக்கொள்வதற்கான நிதியியல் உத்தரவாதத்தை முதலாவதாக இந்தியாவும், அதனைத்தொடர்ந்து பாரிஸ் கிளப் உறுப்புநாடுகளும் வழங்கியிருந்தன.

இருப்பினும் இலங்கையின் மிகப்பாரியளவிலான இருதரப்புக் கடன்வழங்குனரான சீனா உரியவாறான உத்தரவாதத்தை வழங்குவதில் தொடர்ந்தும் தாமதம் காண்பித்துவந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த வாரம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துவெளியிட்ட சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மாவோ நிங், இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான முழுமையான ஒத்துழைப்பை வழங்கத்தயாராக இருப்பதாக உத்தரவாதமளித்திருந்தார்.

இந்நிலையில் நேற்று (செவ்வாய்கிழமை) தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி -

தற்போதைய கடினமான சூழ்நிலையில் அக்கறையுடன் உதவக்கூடியநட்புநாடுகள்கிடைக்கப்பெற்றிருப்பதுஇலங்கையின் அதிஷ்டமாகும்.

அவசியமான அனைத்து உத்தரவாதங்களும் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், நாம் அடுத்தகட்டத்தை நோக்கிப் பயணிக்கத் தயாராக இருக்கின்றோம். - என்று தெரிவித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி கடின உழைப்பு, விடாமுயற்சி மற்றும் பொறுமை ஆகியவற்றின் மூலம் எம்மால் மாற்றத்தை ஏற்படுத்தமுடியும் என்றும், இலங்கையால் முடியும் - என்றும் அமைச்சர் அலி சப்ரி பதிவிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஒரு கோடி ரூபாய் நட்டம்

கடந்த 2021ஆம் ஆண்டு இடம் பெற்ற சீனா சர்வதேச இறக்குமதி கண்காட்சியில், இலங்கையின் பிரதிநிதித்துவம் இல்லாமையால், இலங்கைக்கு சுமார் ஒரு கோடி ரூபா நட்டம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் இந்த தகவல் வெளியாகியுள்ளது.

இந்த கண்காட்சியில் பங்கேற்பதற்காக, இலங்கை தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை, கண்காட்சிக் கூடங்களைத் தயாரிக்க 72 லட்சம் ரூபாக்களை செலவிட்டதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரூபாவின் மதிப்பு மேலும் அதிகரிப்பு



அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் மதிப்பு மேலும் அதிகரித்துள்ளது.

அதன்படி இன்று டொலருக்கு நிகரான ரூபாவின் கொள்விலை 315 ரூபாவாக பதிவாகியுள்ளது.

மேலும் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 335 ரூபாவாக பதிவாகியுள்ளது.

நாட்டின் பொருளாதார நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் அண்மைய நாள்களாக அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி கணிசமாக அதிகரித்து வருகின்றது.



# நாவிதன்வெளி பிரதேச மக்களுக்கு குடிநீர்வசதி கிடைக்க நடவடிக்கை!

## அமைச்சர் ஜீவனுக்கு மக்கள் நன்றி பாராட்டு

தமது கோரிக்கையை ஏற்று, நாவிதன்வெளி பிரதேச மக்களுக்கு குடிநீர் வசதியை பெற்றுக்கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானுக்கு அம்பாறை மாவட்டம், நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவில் வாழும் மக்கள் நன்றிகளை தெரிவித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அன்னமலை - 01, அன்னமலை - 02, நாவிதன்வெளி - 01, சவளக்கடை, சாளம்பைக்கேணி - 03 , சாளம்பைக்கேணி - 04, மத்திய முகாம் - 01 உட்பட 12 கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள மக்கள் குடிநீரைப் பெறுவதில் நெருக்கடியை எதிர்கொண்டனர்.

வீதிகளுக்கு நீர்விநியோகக் குழாய்கள் பொருத்தப்படாமல் இருந்ததாலேயே மக்கள் இவ்வாறு அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

இந்நிலையில் மக்களின் சார்பில், நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினரான தி. யோகநாயகன், அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு கோரிக்கை கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தார்.

அந்தக் கடிதம் கிடைத்த கையோடு, மக்களின் பிரச்சினை உடன் தீர்க்கப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆலோசனை வழங்கினார்.

இதற்கமைய தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை அதிகாரிகளால், நீர்விநியோகக் குழாய்கள் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காகவே மக்களும், குறித்த பிரதேச சபை உறுப்பினரும் அமைச்சருக்கு நன்றி தெரிவித்துள்ளதுடன், அவரின் சேவை நாட்டுக்கு தேவையென வாழ்த்தும் தெரிவித்துள்ளனர்.

# இலங்கை தேங்காய்ப்பாலுக்கு வெளிநாடுகளில் அதிக மவுசு

இலங்கையின் தேங்காய் பாலுக்கு வெளிநாட்டு சந்தையில் அதிக தேவை காணப்படுவதாக தென்னை ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் மாத்திரம் 40 ஆயிரம் மெற்றிக் தொன் தேங்காய்ப்பால் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக அதன் பிரதிப் பணிப்பாளர் சரத் எதிரிசிங்க தெரிவித்துள்ளார். இதன்மூலம் மேலும் 15 கோடி அமெரிக்க டொலர்களை சம்பாதித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனி, இத்தாலி போன்ற நாடுகளில் இலங்கையின் தேங்காய் பாலுக்கு அதிக தேவை இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# குற்றவாளியைப் பாதுகாத்த கடற்படைச் சிப்பாய் கைது

## அவரது மனைவியும் மறியலில்

போரு மூனா என்ற தேடப்படும் கொலைச் சந்தேகத்துக்குரியவருக்கு அடைக்கலம் கொடுத்த குற்றச்சாட்டில் கடற்படைச் சிப்பாய் ஒருவரும் அவருடைய மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பண்டாரகம பிரதேசத்தில் வசிக்கும் இந்த தம்பதியரையே பொலிஸார் இவ்வாறு கைது செய்துள்ளனர்.

2022 ஆம் ஆண்டு டிசெம்பர் 18 ஆம் திகதி ஹங்வெல்லவில் வியாபாரத்தளம் ஒன்றின் உரிமையாளரைக் கொன்றது உட்பட 13 கொலைகளுடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் குற்றவாளியான போரு மூனா, பெப்ரவரி 24 ஆம் திகதி வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்வதற்காக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்குச் சென்றிருந்தபோது கைது செய்யப்பட்டிருந்தார். ஆனால் பின்னர் பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பிச் சென்றுவிட்டார்.

இதன்போது மூன்று பௌத்த பிக்குகள் விமான நிலைய பொலிஸுக்குச் சென்று 'போரு மூனா' தப்பிச் செல்ல உதவினர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டிருந்த நிலையில் போரு மூனா வழங்கிய வாக்குமூலத்தில் ஹங்வெல்ல வியாபாரத்தள உரிமையாளரின் கொலையின் பின்னர், பண்டாரகம, மில்லனிய, மல்வத்த வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் பதுங்கியிருந்தார் எனத் தெரிவித்திருந்தார்.

அதன்படி, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த வேளையில் குறித்த வீட்டின் தம்பதியினரும் தப்பிச் சென்றமை தெரியவந்தது.

பின்னர், விரிவான விசாரணைகளை அடுத்து, இருவரும் நுவரெலியாவில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

முன்னதாக, பொலிஸாரின் பிடியில் இருந்து போரு மூனா தப்பிய சம்பவம் தொடர்பில் இரண்டு பௌத்த பிக்குகள் மற்றும் பொலிஸ் உறுப்பினர் ஆகியோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.



# கல்முனையில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள்

தேசிய டெங்கு தடுப்பு பிரிவின் தேசிய நுளம்பு ஒழிப்பு நிகழ்ச்சிக்கு அமைவாக டெங்குப் பரிசோதனை நிகழ்ச்சியும், நுளம்பு ஒழிப்பு முறை பற்றிய பொதுமக்களுக்கு விழிப்பூட்டலும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் செவ்வாய்க்கிழமை சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரதேசத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம். அர்சத் காரியப்பரின் தலைமையில் இடம்பெற்ற இவ்விழிப்புணர்வு நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு டெங்கு கட்டுப்பாடு தொடர்பில் விளக்கமளித்தார்.

மேலும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் எம்.பி.எம். வாஜித், பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.எம். பைஸால், மாவட்ட மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஐ.எல். லாபீர், உட்பட கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை நிர்வாகத்திற்குட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களின் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், டெங்கு களத்தடுப்பு உதவியாளர்கள், சுகாதார ஊழியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய நிர்வாக பிரதேசங்களில் இடம்பெற்ற கள ஆய்வு விஜயத்தின் போது டெங்கு பரவும் இடங்கள் அழிக்கப்பட்டதுடன், காணி உரிமையாளர்களுக்கு ஆலோசனைகளும், சிலருக்கு எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து வெளியிட்ட சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அர்சத் காரியப்பர் -

காலநிலை மாற்றம் காரணமாக மழைகாலம் ஆரம்பமாக உள்ளதனால் நுளம்பு பெருகுவதை குறைக்கவும், எங்கள் பகுதியில் டெங்கு பரவுவதைத் தடுக்கவும், தினமும் காலை குறைந்தது 10 நிமிடங்கள் உங்கள் சுற்றுச்சூழலைப் நுளம்பு பெருகும் இடங்களை அகற்றி டெங்கு நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.


மேலும் பொதுமக்களாகிய அனைவரும் எமது பிரதேசத்திலிருந்து டெங்கை ஒழிக்க உதவுமாறும் தனியே சுகாதாரத் துறையினரால் மாத்திரம் இந்நோயைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை சகலரும் அறிவீர்.

பொதுமக்கள் தமது வீடு வளவுகளில் தினமும் நீர் தேங்கி நிற்கக்கூடிய பொருள்கள் மற்றும் இடங்களை அகற்றுங்கள் அல்லது நீர் தேங்கி நிற்காதவாறு கவனியுங்கள் எனவும், டெங்கை ஒழிக்க சுகாதாரத்துறைக்கு ஒத்துழைக்காதோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அர்சத் காரியப்பர் தெரிவித்தார்.



காலைக்கதிர்
Kalaikkathir





ந.லோகதயாளன்

# கீரிமலையிலிருந்த சைவ ஆலயங்களுக்கு நடந்தது என்ன?



கீரிமலை ஒரு புனித பூமி. எந்தளவிற்கென்றால், தனது சாம்பல் கீரிமலையில் கரைக்கப்படவேண்டும் என்று இந்தியாவின் மகாத்மா காந்தி விருப்பப்படும் அளவிற்குப் புனித பூமி. வரலாற்றுப் புகழ்பெற்ற தலங்கள் இருந்த இடம். சித்தர்கள் வாழ்ந்து ஆசீர்வதித்த இடம்.

இங்கு பழமை வாய்ந்த சிவன் ஆலயம், சடையம்மா மட்டம், கதிர்காமத்திற்கு யாத்திரை தொடங்கும் முருகன் ஆலயம் என்று இந்தத் தலைமுறை அறியாத பல புனித ஆலயங்களும் மடங்களும் அங்கு அமைந்திருந்தன. சோகம் என்னவென்றால் இனியொருபோதும் அந்த ஆலயங்கள், மடங்கள் குறித்து மக்கள் தெரிந்துகொள்ளாமலேயே போய்விடுவார்கள் என்பதுதான். அந்தளவிற்கு ஆவை இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டுள்ளன.

அந்த இடங்களில் ஜனாதிபதிக்கென்று ஆடம்பர மாளிகை அமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நீண்ட காலமாகவே குற்றச்சாட்டுகள் எழுந்தாலும் அதனை நிரூபிக்கக்கூடிய வசதி இருக்கவில்லை. இப்போது அதனை நிரூபிப்பதற்குத் தேவையான சாட்சியங்கள் கிடைத்திருக்கின்றன.

வலி. வடக்கு கீரிமலை பகுதியில் இருந்த சிவன் ஆலயம் அருகே கிருஸ்ணன் ஆலயம் ஒன்றும் இருந்தது. இந்த ஆலயத்தினைத் தாம் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படவேண்டும் என்று ஆலய நிர்வாகத்தினர் ஒரு தசாப்தத்துக்கும் மேலாக கோரிக்கை விடுத்து வந்தனர். அண்மையில்தான் அதற்கு அனுமதி வழங்கப்பட்டது. கடற்படையினரின் அனுமதியுடன் ஆலய நிர்வாகத்தினர் சிலர் பாதுகாப்பு வலயத்திற்குள் அழைத்துச் செல்லப்பட்டு கிருஸ்ணர் ஆலயத்தைப் பார்வையிட அனுமதிக்கப்பட்டனர்.

கிருஸ்ணர் ஆலய நிர்வாகத்தினர் 1990ஆம் ஆண்டின் பிற்பாடு முதல் தடவையாக இந்த ஆலயத்தை சென்று பார்வையிட்டுள்ளனர். ஆலயத்தை சென்று பார்வையிட்ட ஆலய பரிபாலண சபையினருடன் அப்பகுதி கிராம சேவகரும் சென்றிருந்தார்.

அங்கு சென்றவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. ஆலயத்தின் முகப்புப் பகுதி இடித்து அழிக்கப்பட்டிருந்தது. விக்கிரங்கள் சிலவற்றைக் காணவில்லை. இந்த அதிர்ச்சியோடு எதிர்த்திசையைப்பார்த்தவர்களுக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. அங்கிருந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஆதிசிவன் ஆலயம் இருந்த இடமே தெரியவில்லை. துரைத்தழிக்கப்பட்டிருந்தது.

"கிருஸ்ணர் ஆலயத்தின் வசந்த மண்டபம் முழுமையாக இடித்துத் தள்ளப்பட்டுள்ளது. எஞ்சிய பகுதிகள் உள்ளன. அதேபோல் ஆலய விக்கிரகங்களில் பிள்ளையார், முருகன் என்பனவற்றைக் காணவில்லை. எஞ்சியவை உள்ள அதேநேரம் அருகில் இருந்த பழமை வாய்ந்த சிவன் ஆலயமும் அங்கேயிருந்த சிவலிங்கத்தையும் முழுமையாகக் காணவில்லை. அந்த இடம்வரை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ளதனால் அவை இடித்து அழிக்கப்பட்டுவிட்டதாகவே தெரிகின்றது.

இதேபோன்று கதிரை ஆண்டவர் ஆலயம் அதன் அருகே இருந்த சடையம்மா மடம், எவற்றையும் காணமுடியவில்லை. அவையும் அந்தப் பகுதியில் எங்காவது இடிபாடுகளுடன் இருப்பதாகவும் தெரியவில்லை" எனறார் கிருஸ்ணர் ஆலய பரிபாலண சபைத் தலைவர் கதிரவேலு நாகராசா.

"கிருஸ்ணன் ஆலயத்தை விரைவில் விடுவிப்பதாக வாக்குறியளித்துள்ளனர்" என்றும் தெரிவித்தார்.

ஆதிசிவன் ஆலயம் இடித்து அழிக்கப்பட்ட செய்தி சைவ மக்களைப் பெரும் அதர்ச்சிக்கு உள்ளாக்கிய நிலமையில் அழிக்கப்பட்ட ஆலயம் தொடர்பில் தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத் தலைவர் ஆறு. திருமுருகனைத் தொடர்புகொண்டு கேட்டேன்.

"போர்த்துக்கீசர் காலத்தது ஆதிச்சிவன் ஆலயம். பாதாள கங்கை எனப்படும் கிணற்றுடன்கூடிய சிவன் ஆலயம். இதன் அருகே சித்தர்களின் தியான மடம் இருந்தது. அதிலே நல்லூர் தேரடிச் சித்தரான சடையம்மாவின் சமாதி மற்றும் அவரது மடம் என்பனவும் இருந்தன.

இதேபோன்று நல்லை ஆதீனத்தின் முதலாவது குரு முதல்வரான மணி ஐயரின் சமாதியும் அங்கே இருந்தது. அதேபோன்று பழமையான கதிரை ஆண்டவர் ஆலயம் என்பனவும் இருந்தன. இவ்வாறான ஆன்மீக அடையாளங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டுள்ளமை கவலையும் அளிக்கிறது. பேரதிர்ச்சி அடைந்திருக்கின்றோம்.

இவற்றை மீள அமைத்தே ஆக வேண்டும் என்பதோடு அவற்றினை அழித்தமைக்கும் எமது வன்மையான கண்டனங்களையும் நாம் பதிவு செய்கின்றோம்" என்றார்.

காணாமல் போயிருக்கும் ஆதி சிவன் ஆலயததின் அருகில் மற்றுமோர் சைவ ஆலயமான சோலை வைரவர் கோயில் இருந்துள்ளது. அதற்குப் பூசகராக இருந்த ந.பரமேஸ்வரன் தற்போது திருநெல்வேலியில் வசிக்கின்றார். இந்த ஆலயம் தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:

"1952ஆம் ஆண்டு சீமெந்துத் தொழிற்சாலை அமைக்கும்போது காணிகள் கொள்வனவு மற்றும் சுவீகரிப்பில் அரசு ஈடுபட்டது. எமது ஆலயப் பகுதியினையும. சுவீகரிக்க முற்பட்டனர். அதற்கு எதிர்ப்புக் காட்டப்பட்டதால் அது கைவிடப்படடது. அதன் பின்பு தொழிற்சாலையை மேலும் விரிவாக்க முனைந்த சமயம் 1960ஆம் ஆண்டு எமது ஆலயக் காணியை மீண்டும் சுவீகரிக்க முயன்றனர். அதற்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் ஆலய முகாமையாளர் சரவமுத்து வழக்கு தொடுத்தார்.

பேராசிரியரும் சட்டத்தரணியுமான சுந்தரலிங்கம் வழக்காடினார். அன்று அந்த வழக்கில் ஆலய நிர்வாகத்தினர் வெற்றி பெற்றனர். வணக்கஸ்தல இடத்தில் கை வைக்கக்கூடாது என அன்றே நீதிமன்றம் உத்தரவிட்டதனால் ஆலயம் அன்று தப்பி பிழைத்தது. இன்று அந்த ஆலயம் உண்டா இல்லையா என்பதனைக்கூட அறிய முடியவில்லை" என்றார்.

இப் பகுதியில் அமைந்திருந்த கதிரை ஆண்டவர் ஆலயத்தின் மத குருவாக இருந்த 71 வயதான கிருஸ்ணமூர்த்திக் குருக்கள் கணேச-மூர்த்தி சர்மாவை தேடி இது தொடர்பான விவரங்களைக் கேட்டேன்.

"கதிரைமலை முருகன் ஆலயத்திற்கு எனது குடும்பத்தில் 3 தலைமுறையாக பூசை செய்து வந்திருக்கிறது. இந்த ஆலயத்தின் மூல மூர்த்தியாக வேல் இருந்து வந்தது. பண்டயகால சிற்ப முறையிலே அமைக்கப்பட்ட ஆலயம். அதனோடு குருக்கள் தங்குமிடம், மடப்பள்ளி மட்டு



மன்றி 3 கேணிகள் ஒன்றாகக் காணப்பட்டன.

அதேநேரம் கடல் கரையோடு இருந்தபோதும் இந்த ஆலயத்திற்கு அப்பால் இருந்த கிணற்று நீரே உவராக இருந்தபோதும் ஆலய கேணி நீர் நன்நீராகவே இருந்தது. அயலவர்களின் பாவனைக்கும் பெரிதும் உதவியது.

இந்தப் பிரதேசம் அனைந்து சைவ மரபுகளோடு இருந்தமையால் திருச்செந்தூரை ஒத்த வடிவத்தில் அதனை விருத்தி செய்யவேண்டும் என்று கனவு கண்டோம் அது வெறும் கனவாகவே போய்விடுமோ என்ற அச்சம் காணப்படுகின்றது. ஏனெனில் இந்தப் பிரதேசம் மீண்டும் விடுவிக்கப்படுமா இல்லையா என்ற கேள்வி ஒருபுறமும் கோயில்கள் இருக்கின்றனவா இல்லையா என்ற அச்சம் ஒரு புறமுமாகச் சூழ்ந்திருக்கின்றன" என்றார்.

"எமது ஆயுள் காலத்திலேயே ஒரு தடவையேனும் அந்த இடங்களை மீண்டும் ஒரு தடவை பார்வையிட வேண்டும். அதற்கு இறைவன் அருள் கை கூட வேண்டும்" என்றார்.





இவ்வாறான வரலாற்றுச் சரித்திரம் மிக்க 7 சைவ அடையாளங்களை அழித்தே ஜனாதிபதிக்கு 30 ஏக்கரில் ஆடம்பர மாளிகை அமைக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகன்றது. தமிழ் இன அழிப்பின் ஒரு பகுதியாகவே இவை எல்லாம் அழிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த வரலாற்று அடையாளங்களை அழித்து ஜனாதிபதி மாளிகை அமைக்கும்போது சிலர் குரல் கொடுத்தாலும் பலர் ஏன் குரல் எழுப்பவில்லை என வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தனை தொடர்புகொண்டு கேட்டபோது, இந்த ஜனாதிபதி மாளிகையினை 2013ஆம் ஆண்டிற்கு முன்பே இரகசியமாக அமைந்து விட்டனர், அதற்காக இந்த ஆலயங்கள் இடித்தழிக்கப்பட்டது பற்றி வெளியே யாருக்கும் தெரியவரவில்லை - என்றார்.

"ஜனாதிபதி மாளிகை அமைக்கப்படும் காலத்தில் எமது மக்களையோ மதகுருமாரையோ தெல்லிப்பளைச் சந்திக்கு அப்பால் செல்ல படையினர் அனுமதிக்கவில்லை.ஏன் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் நித்திய பூசைக்கு செல்வதற்கு குருக்களும் நிர்வாகமும் மேற்கொண்ட முயற்சிகள் அத்தோடு மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்திற்கான பூசைக்காக மேற்கொண்ட முயற்சிகள் பல உண்டு. ஆனாலும் நடந்ததுண்டு. இப்போதுதான் ஆலயங்களின் உண்மை நிலை மெல்ல மெல்லத் தெரியவருகின்றது" என்றார்.

யாழ்ப்பாணம் சைவர்களின் புண்ணி பூமி. அதிலும் வலி. வடக்கு புனித பூமி. அத்தைகய வரலாற்றுப் புகழ்மிக்க மண்ணில் இருந்து சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றமை சைவ மக்களைப் பேரதிர்ச்சிக்கும் பெருங் கவலை கொள்ள வைத்துள்ளது. இந்தப் பகுதிகள் அனைத்தும் விடுவிக்கப்பட்டு அங்கிருந்த ஆலயங்கள் மீண்டும் அமைக்கப்படவேண்டும் என்பதே அவர்களின் தீராத அவா.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

## நேற்றைய போராட்டம் .......

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்தார். அதனைப் பார்த்து நாம் அச்சப்பட வில்லை. அவர் உரையாற்றியது நாய் முனகுவ தைப்போன்றுதான் இருந்தது. வேடிக்கையாக இருந் தது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒன்றைக் கூற விரும்புகின்றோம். போலியான விம்பங்களை காண் பித்து மக்களை ஏமாற்ற வேண்டாம். ராஜபக்ஷக்களை காப்பாற்ற வேண்டாம். எமது இந்தப் போராட்டம் வெறும் ஒத்திகைதான். விரைவில் எமது போராட்டத் தின் பிரதான அம்சங்களை உங்களால் காண முடி யும் - என்றார்.

## கல்முனை வடக்குப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு கணக்காளர் இல்லை என்று சொல்வதோ அல்லது நியமிக்கப்படவில்லை என்று சொல்லுவதோ ஒரு அலட்சியமான பதில்.

இலங்கையில் பிரதேச செயலகம் ஒன்றுக்கு கணக்காளர் தேவையில்லை என்று நீங்கள் எவ்வாறு கூறலாம்? இது முற்றுமுழுதாக ஒரு தவறான விடயம். உங்களுடைய பொது நிர்வாக அமைச்சினுடைய செயல்பாடுகள் மிகவும் மோசமாகவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதேச அபிவிருத் திக்குழுக் கூட்டங்களை நடத்துவது இல்லை. மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டங்களில் எடுக்கப்படாத பல தீர்மானங்களை, மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் என்ற அடிப்படையில் ஒருவர் செயற்படுத்துகின்றார்.

உங்களுடைய பகுதியிலுள்ள பிரதேச செயலகத் திற்கு கணக்காளர் இல்லை என்றால் அது தேவை யில்லாத விடயம் என நீங்கள் கூறுவீர்களா. 29 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய ஒரு பிரதேச செயலகம். நிதியினை கையாள முடியாத ஒரு நிலையில் இருக்கிறது.

2019ஆம் ஆண்டு கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு கணக்காளரை நியமிக்குமாறு ஜனாதி பதி உத்தரவிட்டார். ஆனால் இதுவரை நியமிக் கப்படவில்லை.

தாங்கள் ஆட்சிக்கு வந்ததும் ஒரே இரவில் இதனை செயற்படுத்துவோம் என்று நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். அதேபோன்று இராஜாங்க அமைச்சர்க ளான வியாழேந்திரன், பிள்ளையான் போன்றவர்கள் கூறினார்கள் கணக்காளரை நியமிக்காவிட்டால் நிர்வாகத்தினை முடக்குவோம் என்று.

ஆனால் இன்று அவர்கள் அமைதியாக இருக் கின்றார்கள். அதேபோன்று கருணா அம்மானும் இது குறித்து பேசினார் ஆனால் இதுவரை எதுவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இன்றைய தினத்திற்குள் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு கணக்காளரை நியமிக்க வேண்டும். அவ்வாறு நியமிக்கப்படவில்லை என்றால் உங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம். எனத் தெரிவித்துள்ளார்.



(இன்று திருவள்ளுவர் தினம். அதையொட்டி இந்தக் கவிதை வெளியிடப்படுகின்றது)

# வையத்துள் வாழ்வாங்கு வாழ பலவுரைத்தார்!

- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -
மேனாள்தமிழ்மொழிக்கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

நல்லறத்தை நன்னெறியை நாமுணர வைப்பதற்கு
வள்ளுவனார் உவந்தளித்த நல்வரமே குறளாகும்
சொன்னயமும் பொருணயமும் எமக்கீயும் நன்னூலாய்
எஞ்ஞான்றும் விளங்குவது எங்கள் திருக்குறளாகும்

ஆயிரத்து முன்னூற்று முப்பதென்ப தெண்ணல்ல
அத்தனையும் அனைவருக்கும் வாய்த்தபெரு பொக்கிமே
ஈராயிரம் வருடம் நிலைத்திருந்து இம்மண்ணில்
பேரொளியாய் திகழுவது வள்ளுவத்தின் பெருமையன்றோ

தமிழன்னை பெற்றெடுத்த தவப்புதல்வர் பலராவர்
அனைவருமே அன்னைக்கு ஆசைமிகு புத்திரரே
என்றாலும் வள்ளுவரை எம்மன்னை அணைத்திடுவாள்
வள்ளுவரால் தமிழமுது வானளவும் சென்றதுவே

இல்லறத்தைச் சொன்னார் துறவறத்தைச் சொன்னார்
நல்லறத்தை அதனூடாய் நயமுடனே பயந்தார்
சொல்லறத்தை வள்ளுவத்தின் உயிராக்கி நின்றார்
சுவையோடு கருத்துரைத்து வள்ளுவத்தை ஈந்தார்

எதுவுரைத்த போதும் அதுவாகி நின்றார்
எவருணர்வும் நோகா கருத்துரைக்க நினைத்தார்
நினைத்த கருத்தை நீதியாய் உரைத்தார்
நிலையாக நிற்கும்படி வள்ளுவத்தைக் கொடுத்தார்

அன்னைக்கும் சொன்னார் அப்பனுக்கும் சொன்னார்
அவரீன்ற பிள்ளைகட்டும் அருமையாய் சொன்னார்
கல்லென்று சொன்னார் நடவென்று சொன்னார்
கல்லாமல் இருந்தால் கண்ணில்லை என்றார்

கற்றுவிட்டால் எழுமைக்கும் துணையாகு மென்றார்
கல்லாமை யாவருக்கும் பொல்லாமை என்றார்
கற்றுவிடு கற்றுவிடு எனவுரைத்து நின்றார்
கடவுளடி பற்றுவதே கற்றபயன் என்றார்

சினமடக்கு என்றார் தீயசெயல் கடிந்தார்
தனக்குவை இல்லான் தாழ்சேரு என்றார்
மனக்கவலை மாற்ற மருந்துபல சொன்னார்
வையத்துள் வாழ்வாங்கு வாழ பலவுரைத்தார்

நன்மைதரும் இன்சொல்லை நாடுவெனச் சொன்னார்
நலனற்ற சொல்லனைத்தைம் கேடுவென வுரைத்தார்
இனிமையுடன் பேசுவதே இன்பமெனச் சொன்னார்
இவையனைத்தும் வள்ளுவத்தின் உயிர்மூச்சு என்றார்

கொல்லாதே என்றார் குடியாதே என்றார்
கொல்லுவதைத் தின்னுவதை விட்டுவிடு என்றார்
நீவளர உயிர்வதைத்தல் நீதியிலை என்றார்
உயிரோம்பி வாழுதல்தான் உயர்வாழ்வு என்றார்

புத்துணர்வுக் கருத்துக்களை பொறுப்புடனே சொன்னார்
புலனெல்லாம் தூய்மைபெற பொருத்தமாய் புகன்றார்
பொருத்தமில்லா கருத்துக்களைப் புறந்தள்ளி நின்றார்
புவிவாழ பொருந்துவதை வள்ளுவமாய் கொடுத்தார்




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.03.202இல் வெளியிடப்பெற்றது.

**நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.**


பக்கங்கள்: 05

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 23 செவ்வாய்க்கிழமை 07.03.2023 கதிர் 370


## ஆட்டிறைச்சி முள் குத்தி குடும்பப் பெண் இறப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச் 07

ஆட்டிறைச்சி முள் தொண்டையில் குற்றியதால் ஏற்பட்ட உட்காயத்திற்கு முறையான சிகிச்சை பெற மறுத்த பெண் பரிதாபகரமான உயிரிழந்தார்.

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைச் சேர்ந்தவரான லோகேந்திரகுமார் மேரிஜெனிஸ்கா (வயது 45) என்னும் இரு பிள்ளைகளின் தாயரே இவ்வாறே உயிரிழந்தார்.

பெப்ரவரி 25ஆம் திகதி மதிய உணவின்போது ஆடு இறைச்சி சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது 2

## கடத்த இருந்த அழகுசாதன பொருள்கள் தமிழகத்தில் மீட்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச் 07

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கடத்த முற்பட்ட அழகுசாதனப் பொருள்கள் மற்றும் கிருமி நாசினி என்பன தமிழ்நாடு பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தியாவின் இராமநாதபுரம் மாவட்டம் அருகே இலங்கைக்கு கடத்துவதற்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த அழகு சாதன பொருட்களும் கிருமிநாசினியுமே இவ்வாறு தமிழகப் பொலிசாரால் 2

# ஏப்ரல் 25 தேர்தல்

## முடிவு செய்தது ஆணைக்குழு

**உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கான புதிய தினமாக ஏப்ரல் 25ஆம் திகதியைத் தேர்தல்கள் ஆணைக் குழு முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக ஆராய இன்று கூடிய தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் புதிய திகதியை முடிவு செய்தனர்.** 2

சீனாவின் உத்தரவாதத்தைத் தொடர்ந்து

## நாணய நிதியத்தின் கடன் மார்ச் இறுதிக்குள் நிச்சயம்

### ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

(தன்வின்)

சீன எக்சிம் வங்கியின் கடன்நிதி உறுதிப்பாட்டுக்கான இணக்கப்பாட்டைவெளிப்படுத்தும் எழுத்து மூலமான கடிதத்தில் நானும், மத்தியவங்கி ஆளுநரும் கையொப்பமிட்டு சர்வதேச நாணயநிதியத்துக்கு அனுப்பிவைத்துள்ளோம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் இன்று அறிவித்தார்.

தற்போதைய பொருளாதாரம் மற்றும் சர்வதேச நாணயநிதியத்துடனானபேச்சு முன்னேற்றம் தொடர்பில் நாடாளுமன்றில் இன்றுநிகழ்த்திய விசேட உரையிலேயே அவர் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுமக்கள் முகங்கொடுக்கும் நெருக்கடிகள் தொடர்பாக நான் முழுமையாக அறிவேன். அவர்களின் நிலைமைகளையிட்டு, கவலையடைகின்றேன். அவர்களிடத்தில் மன்னிப்புக்கேட்டுக்கொள்கின்றேன்.

அதேநேரம், நேற்றைய தினம் சீனாவினுடைய எக்சிம் வங்கி யின் கடன் நிதி உறுதிப்பாட்டுக்கான எழுத்து மூலமான உத்தரவாதக் கடிதம் எமக்கு கிடைத்தது. உடனடியாகவே நானும், இலங்கை மத்திய வங்கி ஆளுநரும் கலந்துரையாடி கையெ-ாப்பமிட்டு சர்வதேச நாணயநிதியத்துக்கு அதனை அனுப்பிவைத்துள்ளோம். எமது கடமையை நாம் செய்துவிட்டோம்.

இதனடிப்படையில், அனைத்து இரு தரப்பு கடன் வழங்குநர்களும் நிதியியல் உறுதிபாடுகளை வழங்கியுள்ளனர். எனவே, இந்த மாதத்தின் 3 அல்லது 4 ஆவது வாரத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் 2.9 பில்லியன் டொலர் நிதி கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்கின்றேன்.

அதன் பின்னராக, அடுத்த சுற்று நிதியைப் பெற் றுக்கொள்வதற்கான பேச்சுக் கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். குறிப்பாக, உலக வங்கியிடமிருந்து அந்த நிதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெறுவதற்கு கடந்த ஆண்டு மார்ச் மாதம் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் தற்போதைய நிலையில் நாடு பெற்றுக்கொண்ட இருதரப்பு கடன்கள் தற்போது செலுத்தப்படுவதில்லை. 2

## 2 பேருந்துகள் மோதியதில் ஒருவர் சாவு; 23 பேர் காயம்

### மாவனெல்லையில் சம்பவம்

கொழும்பு-கண்டிபிரதான வீதியில் மாவனெல்லை - கணேதன்ன பகுதியில் இடம்பெற்றபேருந்துவிபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அத்துடன், இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மேலும் 23 பேர் மாவனெல்லை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கண்டியில் இருந்து கொழும்புநோக்கிப்பயணித்த இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் ஒன்றும், நீர்கொழும்பில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து ஒன்றும் மோதிக்கொண்டதில் 2

## கடன் சீரமைப்பு உத்தரவாதத்தை முழுமையாக வழங்கியது சீனா

### சர்வதேச நாணய நிதியத்திற்குக் கடிதம்

இலங்கையின் கடன் மறுசீரமைப்பிற்கு ஆதரவளிப்பதாக சீனா சர்வதேச நாணய நிதியத்துக்கு எழுத்து மூலமான உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது என்று புளும்பேர்க் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் பிரதான இருதரப்பு கடன் வழங்குநராகவுள்ள சீனா, மார்ச் 6ஆம் திகதி தனது நாட்டின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியின் ஊடாகவே இந்தக் கடிதத்தினை அனுப்பியுள்ளதாக புளும்பேர்க் இணையதளம் மேலும் குறிப்பிட்டுள்ளது

சீனாவின் குறித்த அறிவிப்பின் மூலமாக சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி வசதியை பெறுவதற்கு இலங்கைக்கு காணப்பட்ட மிகப்பெரிய 2

## நீரில் மூழ்கி ரஷ்ய பிரஜை உயிரிழப்பு!

ரஷ்ய பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹுங்கம, கஹந்த மோதர - முகத்துவாரம் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கஹந்தமோதர - முகத் துவாரத்துக்கு அருகிலுள்ள கடற்கரையில் பயணித்த மூன்று ரஷ்யர்களில் ஒருவர் முகத்து-வாரத்தில் இறங்கிய பின்னர் நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்று விடுதி ஊழியர் ஒருவர் பொலிஸ் விசாரணையின் போது தெரிவித்துள்ளார். ரஷ்யபிரஜையான செர்பினன் பெட்ஸி என்ற 44 வயதுடைய நபரே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று ஹுங்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த இந்த ரஷ்ய நாட்டவர் கஹந்த மோதர பிரதேசத்தில் பத்து வருடங்களுக்கு மேலாக தனது சகோதரருடன் வசித்து வந்துள்ளார் என்று 2

# ஒரே குடும்பத்தில் அனைவருமே வவுனியாவில் இன்று மர்மச் சாவு

## இரு குழந்தைகளும் அடங்குவர்



யாழ்ப்பாணம், மார்.07

தந்தை, தாய் மற்றும் சிறுவர்களான இரண்டு பிள்ளைகள் என ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் மர்மமான முறையில் இன்று காலை மீட்கப்பட்டமை வவுனியாவில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வவுனியா, குட்செட் வீதி, அம்மாபகவான் ஒழுங்கையில் இந்த மர்மச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த சிவபாதசுந்தரம் கௌசிகன்(வயது -42) கௌ.வரதராயினி (வயது-36), கௌ.மைத்ரா (வயது - 09), கௌ.கேசரா (வயது - 03) ஆகியோரே சடலங்களாக மீட்கப்பட்டனர்.

குடும்பத்தலைவரான கௌசிகனின் சடலம் வீட்டின் விறாந்தைப் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளது. மீட்கப்பட்டதுடன், அவரது மனைவியும்

பிள்ளைகளும் அவரவர் படுக்கையில் தூங்கும் நிலையில் உள்ளனர்.

அவர்களின் சடலங்கள் போர்வையால் நன்கு போர்த்தப்பட்டுள்ளன.

இது தொடர்பாக வவுனியாப் பொலிஸாருக்குத் தகவல் தெரியப்படுத்தப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலங்களை மீட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இவர்களது இறப்புக்கான காரணம் உடனடியாகத் தெரிய-வரவில்லை.

சம்பவம் தொடர்பில் பல கோணங்களில் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துவரும் வவுனியாப் பொலிஸார், மீட்கப்பட்ட சடலங்களைச் சட்ட வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்து-வதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தச்சம்பவம் வவுனியாவில் பலரையும் பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

## உக்ரைன் போரை நிறுத்த வலியுறுத்திப் போராட்டம்

### யாழ். நகரில் இன்று முன்னெடுப்பு




(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்.07

ரஷ்யா- உக்ரைன். போரை நிறுத்த வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புபோராட்டம் இன்று நடத்தப்பட்டது.

சோசலிச சமத்துவக் கட்சியின் ஏற்பாட்டில் பலாலி வீதியின் பரமேஸ்வராச் சந்தியில் பிற்பகல் 3 மணியளவில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. போர்கள் முழுவதையும் தடுக்கவேண்டும், ஆயதம் வழங்குவதனைநிறுத்தவேண்டும், அணு ஆயுதப்பரீட்சைக்கு இட்டுச்செல்லக்கூடாதுபோன்ற கோசங்கள் எழுப்பப்பட்டன.

இவ்வாறு இடம்பெற்ற போராட்டத்தில் சுமார் 25 பேர் கலந்துகொண்டனர்.

தேர்தலை விரைந்து நடத்தக் கோரும்

## பல்கலைகழக மாணவர்களின் ஆர்ப்பாட்டம் மீதும் தாக்குதல்

### கொழும்பில் பதற்றம்



கொழும்பில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் இன்று முன்னெடுத்த ஆர்ப்பாட்டப் பேரணி மீது நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைப் பிரயோகங்களைப் பொலிஸார் நடத்தியுள்ளனர்.

கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு அருகில் வைத்து இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் இடப்பட்டிருந்த 2

## கடன் சீரமைப்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தடை நீங்கியுள்ளதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக, சீனாவினுடைய எக்சிம் வங்கியானது, தன்னால் வழங்கப்பட்ட இலங்கைக்கான கடனைத் திருப்பிச் செலுத்துவதற்க இரண்டு வருடங்களுக்கு கால அவகாசம் வழங்கும் வகையில் மறுசீரமைப்பதாக குறிப்பிட்டு கடிதமொன்றை சர்வதேச நாணய நிதியத்திற்கு அனுப்பியிருந்தது. எனினும், குறித்த சீனாவின் கடன் மறுசீரமைப்பு கடித உத்தரவாதம் முழுமையடைந்ததாக இல்லை என்று அமெரிக்கா பகிரங்கமாக தெரிவித்திருந்தது. இதனால், சீனா மீண்டும் இலங்கைக்கான கடன் மறுசீரமைப்பு தொடர்பில் எழுத்துமூலமான உத்தியோகபூர்வமான அறிவிப்பினை விடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே தற்போது உத்தியோகபூர்வமான சீனா அறிவித்தலை விடுத்துள்ளது.

இதேவேளை, இலங்கை சர்வதேச நாணயநிதியத்திடமிருந்து நிதி உதவியை பெறும்நிலையில் உள்ளதாக ரொய்ட்டஸ் செய்தி வெளியிட்டுள்ளது. ஆளும் கட்சியில் உள்ள சிரேஷ்ட அமைச்சர் ஒருவரை மேற்கோள்காட்டியுள்ள ரொய்ட்டஸ் சீனாவிடமிருந்து கடன் மறுசீரமைப்பிற்கான ஆதரவு கிடைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

## நீரில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரியவந்துள்ளது. இந்த நிலையில், தனது சகோதரனுடனும் மற்றுமொரு ரஷ்ய பெண்ணுடனும் கடற்கரையில் நடந்து சென்ற போதே அவர் இந்த அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளார் என்று ஹுங்கம பொலிஸார் மேலும் கூறியுள்ளனர்.

## ஆட்டிறைச்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முள் அவரது தொண்டைக்குள் சிக்கிக் கொண்டது. இதனால் அவதிப்பட்ட அவர், மறுநாள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். 28ஆம் திகதி அறுவைச் சிகிச்சை செய்வதற்காக அவரது தொண்டைப் பகுதியை எக்ஸ்ரே எடுக்கவேண்டும் என்று சொன்ன சமயம், அதற்கு மறுப்புத் தெரிவித்து, வீட்டுக்குத் திரும்பியுள்ளார்.

உபாதை குறையாத காரணத்தால் மார்ச் 6ஆம் திகதி காலையில் குருதியாக வாந்தி எடுத்த அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர் உறவினர்கள். முற்பகல் 2.30 மணியளவில் அவர் உயிரிழந்தார் இவரது உடற்கூறாய்வில் இறைச்சி எலும்பு குருதிக் குழாயில் குத்தியதனால் இறப்புச் சம்பவித்தமை கண்டறியப்பட்டது.

இவரது மரண விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

## கடத்த இருந்த.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு இலங்கைக்கு கடத்துவதற்கு முற்பட்ட 450 கிலோ பூச்சிகொல்லி மருத்துகளுடன் 125 அழகு சாதன பொருட்கள், கடிகாரம், உள்ளிட்ட பொருட்கள் 120 கிலோ என்பன பொலிசாரால் பறிமுதல் செய்யப்பட்டன. இவற்றை உடமையில்வைத்திருந்த இரண்டு சந்தேகநபர்களும் கடலோர பாதுகாப்பு குழும போலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணை இடம்பெறுகின்றது.

## 2 பேருந்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த விபத்து நேர்ந்துள்ளது. சம்பவத்தில் மீரிகம பிரதேசத்தைச் சேர்ந்த 59 வயதுடைய நபரே உயிரிழந்தார்.

காயமடைந்தவர்களில் இரு பேருந்துகளின் சாரதிகளும் அடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மாவனெல்லை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## நாணய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பலதரப்பு மற்றும் வணிகக் கடன்கள் மாத்திரமே மீள செலுத்தப்படுகின்றன.

இவ்வாறான நிலையில், சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் முறியுமாயின், வெளிநாடு மற்றும் தனியார் வங்கிகளில் பெற்ற கடனை செலுத்த வேண்டி ஏற்படும். அதுகடந்த 7 முதல் 8 மாதங்களுக்கு முன்னர் எதிர்கொண்ட நிலைமையைவிடக் கடினமானதாக அமையும்.

வரிச்சுமை அதிகரித்துள்ளதாகத் தொழில் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். எனினும், குறுகிய காலத்துக்கு இதனை தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கும். இந்த நிலைமையை, மக்களும், தொழிற்சங்கங்களும் புரிந்துகொள்ளவேண்டும். இதனை புறக்கணித்தால் தற்போதையதைவிட நிலைமை மிகவும் மோசமாகும்.

கருத்துச் சுதந்திரத்திற்கு நாம் எதிரானவர்கள் இல்லை. ஆனால், அதன் பெயரால் விசமத்தனமான ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை மேற்கொண்டு இயல்பு நிலைமைகளை குழப்புவதும், முறைப்படியாக முன்னெடுக்கப்படும் சர்வதேச கலந்துரையாடல்கள் குழம்புவதும் பொருத்தமற்றதாகும்.

ஆகவே அவ்விதமான நடவடிக்கைகள் தொடருமாக இருந்தால் நாம் நிச்சயமாக, கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தள்ளப்படுவோம். அவ்விதமான திட்டமிட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக அரசு நிச்சயமாக கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுக்கும்.

அதேநேரம், சர்வதேசநாணயநிதியத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் குறித்த ஒப்பந்தம் மற்றும் வழிவரைபடம் என்பனவற்றை சபைக்குச் சமர்ப்பிப்பேன் – என்றும் அவர் தெரிவித்தார்.

## பல்கலைக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸ் வீதித் தடைகளை மீறி ஆர்ப்பாட்டக்காரர்கள் பயணிக்க முயற்சித்த போதே நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டுவீச்சு நடத்தப்பட்டுள்ளன. இதனால் அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

முன்னதாக, அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் இன்று கொழும்பில் நடத்திய போராட்டத்துக்கு கோட்டை நீதிவான் நிதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்தது.

நீதிவான் திலின கமகே பிறப்பித்துள்ள உத்தரவில், இன்று காலை 11 மணி முதல் இரவு 10 மணி வரை ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், நிதியமைச்சு மற்றும் காலி முகத்திடல் வளாகம் ஆகிய இடங்களுக்குள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்கள் பிரவேசிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, கொழும்பின் ஏனைய முக்கிய வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதைத் தவிர்ப்பதோடு, பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கப்படக்கூடாது என்றும் குறித்த தடை உத்தரவு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே உட்பட 16 மாணவர் சங்கங்களின் செயற்பாட்டாளர்கள் மற்றும் அதில் பங்குபற்றுபவர்களுக்கு இந்த உத்தரவு பொருந்தும் எனவும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதேநேரம், இந்தத் தடை உத்தரவுக்கு மத்தியிலும் மாணவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் புஞ்சி பொரளைப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு கொழும்புநகர மண்டபம் ஊடாக நகர்ந்த நிலையில் அதன் மீது கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு அருகில் வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

# கொழும்பில் ஓட்டோவில் பயணித்தோர் மீது சூடு

## எவருக்கும் காயம் ஏற்படவில்லை

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் இன்று துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் எவருக்கும் காயமேற்படவில்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

ஓட்டோவில் பயணித்தவர்கள் மீது கார் ஒன்றில் வந்த குழுவினரால் இந்தத் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# கிணற்றிலிருந்து சடலமாக தனித்திருந்த பெண் மீட்பு

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கச்சாய் பகுதியில் தனிமையில் இருந்த பெண் ஒருவர் திங்கட்கிழமை காலை வீட்டுக் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கச்சாய் தெற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த 62 வயதான சரோஜாதேவி என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அயல் கிராமத்தில் வசிக்கும் குறித்த பெண்ணுடைய மகன் தாயாருக்கு வழமை போன்று உணவெடுத்து வந்த போதே தாயார் கிணற்றில் சடலமாகக் கிடந்ததைக் கண்டுள்ளார். உயிரிழந்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டு உடற்கூறாய்வு மற்றும் விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

## ஏப்ரல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மார்ச் 9ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலே இவ்வாறு பிற்போடப்பட்டுள்ளது. புதிய தேர்தல் திகதி குறித்து மார்ச் 3ஆம் திகதி கூடி முடிவெடுப்பதற்கு ஆணைக்குழு முன் னர் முடிவெடுத்திருந்தது. ஆனால், அன் றைய தினம் உயர் நீதிமன்றம், தேர்தலுக்கான நிதியை விடுவிப்பதற்கு யாரும் மறுக்கக்கூடாது என்று உத்தரவிட்டிருந்தது.

இதனை அடுத்து தேர்தல் திகதியை முடிவு செய்வதை இன்றைய தினம் வரைக்கும் ஒத்திவைத்தது ஆணைக்குழு. இன்று காலை தேர்தல்கள் திணைக்களத்தில் கூடிய ஆணைக்குழு உறுப்பினர்கள் தேர்தல்களை ஏப்ரல் 25ஆம் திகதி நடத்துவது என்று முடிவு செய்தது.

தபால்மூல வாக்களிப்பு மார்ச் 28, 29, 30, 31 மற்றும் ஏப்ரல் 3ஆம் திகதிகளில் நடைபெறும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை வர்த்தமானி மூலமாக ஆணைக்குழு வெளியிடும்.

# தருமபுரத்தில் 5 பேர் கைது

இருவேரு குற்றச்சாட்டில் ஆறு பேர் கைது தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுண்டிக்குளம் மற்றும் கல்மடு ஆகிய பகுதிகளில் சட்ட விரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட டிப்பர் வாகனம் இரண்டும் உழவியந்திரம் ஒன்றும் தருமபுரம் பொலிஸால் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

தருமபுர போலீசாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து இந்த இரண்டு வாகனங்களும் கைப்பற்றப்பட்டன என்றும் அதிலிருந்த இரு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இதே பகுதியில் வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் கஞ்சா வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் மேலும் மூன்று பேரைக் கைது செய்துள்ளனர். சந்தேகநபர்களிடம் இருந்து 5.5 கிராம் கஞ்சாவினைப் பறிமுதல் செய்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஐ.நா. தீர்மானத்தை மீண்டும் நிராகரித்தது இலங்கை அரசு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2022 நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானத்தை முழுமையாக நிராகரிப்பதாக இலங்கை மீண்டும் அறிவித்துள்ளது.

"ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஆணையர் அலுவலகத்தால் இலங்கை தொடர்பில் உருவாக்கப்பட்டுள்ள ஆதாரங்களைத் திரட்டும் வெளியகப் பொறிமுறையை மேலும் விரிவுபடுத்தி - வலுப்படுத்துகின்ற 51/1 தீர்மானத்தை ஏற்கனவே கடந்த ஒக்ரோபர் மாதம் வெளிவிவகார அமைச்சர் கூறியமை போன்று நாம் முழுமையாக நிராகரிக்கின்றோம்.

இந்தத் தீர்மானங்கள் எமது நாட்டு மக்களுக்கு எவ்வகையிலும் உதவவில்லை என்பதுடன் இலங்கைச் சமூகம் துருவமயப்படுத்தப்படுவதற்கு வழிவகுப்பதாக அமைந்துள்ளது.

அதுமாத்திரமன்றி, இவை இலங்கையில் நல்லிணக்கத்தை மேம்படுத்தல் என்ற இலக்கைப் பூர்த்தி செய்யும் வகையில் அமையவில்லை. எனவே இது வேறு பயனுள்ள விடயங்களுக்காகப் பயன்படுத்தப்படக்கூடிய ஐ.நா. உறுப்பு நாடுகளின் நிதியை வீணடிக்கின்ற செயற்திறனற்ற நடவடிக்கை என்பதே எமது நிலைப்பாடாகும்."

மனித உரிமைகள் விவகாரம் அரசியல்மயமாக்கப்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும் எனவும், கரிசனைக்குரிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல் மற்றும் பல்தரப்பு ஒத்துழைப்பு ஆகியவற்றின் ஊடாகத் தீர்வு காண முயலவேண்டுமே தவிர, மோதல்களைத் தோற்றுவித்தல், ஒருதலைப்பட்சமான தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் செயற்படக்கூடாது என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 52 ஆவது கூட்டத்தொடர் பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி தொடங்குவதுடன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.



இந்தக் கூட்டத்தொடரின் அமர்வில் இலங்கை சார்பில் உரையாற்றிய ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹிமாலி அருணாதிலக, மனித உரிமைகள் பேரவையால் நிறைவேற்றப்பட்ட எவ்வகையிலும் பயனளிக்காத தீர்மானங்களின் தொடர்ச்சியாக கடந்த வருடம் இலங்கையின் உடன்பாடின்றி 51/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 46/1 தீர்மானத்தின் பிரகாரம் அந்தப் பேரவையினாலேயே சுயமாக முன்வைக்கப்பட்ட விளக்கங்களின் அடிப்படையில் ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர் அலுவலகத்தால் இலங்கை தொடர்பில் உருவாக்கப்பட்டுள்ள ஆதாரங்களைத் திரட்டும் வெளியகப் பொறிமுறையை மேலும் விரிவுபடுத்தி - வலுப்படுத்துகின்ற 51/1 தீர்மானத்தை ஏற்கனவே கடந்த ஒக்ரோபர் மாதம் வெளிவிவகார அமைச்சர் கூறியமை போன்று நாம் முழுமையாக நிராகரிக்கின்றோம்.

இந்தத் தீர்மானங்கள் எமது நாட்டு மக்களுக்கு எவ்வகையிலும் உதவவில்லை என்பதுடன் இலங்கை சமூகம் துருவமயப்படுத்தப்படுவதற்கு வழிவகுப்பதாக அமைந்துள்ளது.

அதுமாத்திரமன்றி, இவை இலங்கையில் நல்லிணக்கத்தை மேம்படுத்தல் என்ற இலக்கைப் பூர்த்தி செய்யும் வகையில் அமையவில்லை. எனவே இது வேறு பய னுள்ள விடயங்களுக்காகப் பயன்படுத்தப்படக்கூடிய ஐ.நா. உறுப்பு நாடுகளின் நிதியை வீணடிக்கின்ற செயற்திறனற்ற நடவடிக்கை என்பதே எமது நிலைப்பாடாகும். – என்றும் இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி ஹிமாலி அருணாதிலக தெரிவித்துள்ளார்.

அதேபோன்று மனித உரிமைகள் விவகாரம் அரசியல்மயமாக்கப்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும் எனவும், கரிசனைக்குரிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல் மற்றும் பல்தரப்பு ஒத்துழைப்பு ஆகிய– வற்றின் ஊடாகத் தீர்வுகாண முயலவேண்டுமே தவிர, மோதல்களைத் தோற்றுவித்தல், ஒருதலைப்பட்சமான தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் செயற்படக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதுமாத்திரமன்றி இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய– வற்றை உறுதிப்படுத்துவதை முன்னிறுத்தி இயங்கிவரும் கட்டமைப்புக்கள் யுத்தத்தின் பின்னரான மீட்சியை அடைந்துகொள்வதை இலக்காகக்கொண்டு செயலாற்றிவருவதாகவும் ஹிமாலி அருணாதிலக பேரவையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல்வேறுபட்ட சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கும், வடக்கு - கிழக்கு மாகாணங்களைச்சேர்ந்த மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்குமென ஜனாதிபதியின் தலைமையின்கீழ் அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அந்தக்குழு, உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை ஸ்தாபித்தல், புதியபயங்கரவாதத்தடைச்சட்டவரைவைத் தயாரித்தல், புலம்பெயர்ந்துவாழும் இலங்கையர்களுக்கென தனியாக அலுவலகமொன்றை உருவாக்குதல், வடக்கு - கிழக்கு தொடர்பில் இடைவிலகாத அபிவிருத்திச் செயற்திட்டமொன்றைத் தயாரித்தல், காணாமல் போனோர் விவகாரம் மற்றும் காணி விடுவிப்பு என்பன தொடர்பில் உரியவாறான தீர்வை வழங்கல் ஆகியன உள்ளடங்கலாக உடனடியாகத் தீர்வுகாணப்படவேண்டிய பிரச்சினைகளை இனங் கண்டுள்ளது எனவும் ஹிமாலி அருணாதிலக அவரது உரையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அரசமைப்பின் பிரகாரம் உண்மையைக் கண்டறியும் பொறிமுறையொன்றை ஸ்தாபிப்பது மேற்படி கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன எனவும், இலங்கைக்குப் பொருத்தமான உண்மையைக் கண்டறியும் செயற்திட்ட மாதிரி தொடர்பில் ஆராயப்பட்டுவருதாகவும் பேரவையிடம் சுட்டிக்காட்டியுள்ள இலங்கையின் வதிவிடப்பிரதிநிதி, கடந்த ஆண்டு ஒக்ரோ பர் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அரசமைப்புக்கான 21ஆவது திருத்தத்தின் ஊடாக நாட்டின் ஜனநாயக நிர்வாகம் வலுப்படுத்தப்பட்டிருப்பதுடன் அரசமைப்புப்பேரவை மற் றும் சுயாதீனஆணைக்குழுக்களின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். அது மாத்திரமன்றி தேசிய பாதுகாப்புதொடர்பானகரிசனைகள் மற்றும் சர்வ தேச சட்ட நியமங்கள் ஆகிய இரண் டையும் சமநிலை யில் பேணக்கூடிய– வாறான பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் அமைச் சரவை உபகுழுவால் தயாரிக்கப்படுவதாகவும் அவர் எடுத்துரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நீதிமன்ற உத்தரவை நிதி அமைச்சு மீறினால் சட்டநடவடிக்கை எடுப்போம்!

## விஜித்த ஹேரத் எச்சரிக்கை

உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவதற்கான திகதி அறிவிப்பதை மேலும் தாமதிக்காமல் தேர்தல் ஆணைக்குழு உடனடியாக திகதி பிரகடனப்படுத்த வேண்டும்.



அத்துடன் தேர்தலுக்கான பணத்தை நிதி அமைச்சு விநியோகிக்காவிட்டால் அது நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்கு ஆளாகும் என மக்கள் விடுதலை முன்னணியின் ஊடக பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

உயர் நீதிமன்ற உத்தரவுக்கு பின்னரும் இதுவரை தேர் தல் ஆணைக்குழு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தும் திகதி அறிவிக்காமல் இருப்பது தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

தேர்தலுக்காகவரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியை விடுவிக்குமாறு உயர்நீதிமன்றம் நிதி அமைச்சுக்கும் அமைச்சின் செயலாளருக்கும் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அதனால் இவர்களுக்குதற்போதுநிதியை விடுவிக்காமல்இருக்கமுடியாது. நீதிமன்ற உத்தரவுக்கு நிச்சயமாக கட்டுப்பட்டே ஆகவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் நீதிமன்ற உத்தரவை மீறியதாகத் தெரிவித்து, அதிகாரிகளுக்கு எதிராக சட்ட ரீதியிலான நடவடிக்கை எடுக்க முடியும்.

அத்துடன் தற்போது தேர்தல் ஆணைக்குழுவுக்கு இருக்கும் பொறுப்பு உடனடியாக தேர்தலுக்கான திகதியை அறிவிப்பதாகும். அதற்கு காலம் தாழ்த்துவதற்கு எந்த தேவையும் இல்லை.

நிதி அமைச்சின் செயலாளர், அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் பிரதானி ஆகியோருடன் கலந்துரையாடிக்கொண்டிருக்க எந்த தேவையும் இல்லை. இவர்களுடன் கலந்துரையாட வேண்டும் என தெரிவிப்பது மேலும் காலம் தாழ்த்துவதாகும்.

அதனால் உடனடியாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலைநடத்துவதற்கானதிகதியை தேர்தல் ஆணைக்குழு பிரகடனப்படுத்த வேண்டும். அது ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

அது அவர்களின் கடமையாகும். அதனை அவர்கள் செய்தே ஆக வேண்டும். கலந்துரையாடல்களை மேற்கொள்வதன் மூலம் மேலும் காலதாமதம் ஏற்படுகிறது.

தேர்தல் ஆணைக்குழு தேர்தலுக்கான திகதியை அறிவித்தால், நிதி அமைச்சு அதற்கான பணத்தை வழங்க வேண்டும்.

இது தற்போது நீதிமன்ற உத்தரவின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.அதனால் உள்ளூராட்சிமன்றதேர்தலைப் பிற்போடுவதற்கு எந்த தேவையும் இல்லை. – என்றார்.

# பிக்குகளின் தலையீடுகளே தீர்வு கிட்டாமைக்கு காரணம்!

## விக்னேஸ்வரன் சாடல்

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு அரசியல் விவகாரங்களில் பௌத்த தேரர்களால் மேற்கொள்ளப்படும் தலையீடுகளே காரணம் என்பதே எனது நிலைப்பாடாகும்.



வடக்கு, கிழக்கு வாழ் தமிழ்மக்களின் பிரச்சினைகள் என்னவென்பதைக் கண்டறிவதற்கு ஆங்கிலம் அல்லது தமிழ்மொழி பேசக்கூடிய பௌத்த தேரர்கள் தமிழ் தலைவர்களுடன் கலந்துரையாடுவது இன்றியமையாததாகும் என்று தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தக்கூடாது என வலியுறுத்தி மல்வத்து, அஸ்கிரிய, அமரபுர மற்றும் ராமாஞ்ஞ பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் கடந்த மாதம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கூட்டாகக் கடிதமொன்றைக் கையளித்திருந்தனர். அந்தக் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை மேற்கோள்காட்டி, அவற்றுக்கு விளக்கமளித்து இந்நான்கு மகாநாயக்க தேரர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தார்.

அந்தக் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்கள் சிங்கள சமூகத்தின் மத்தியில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன எனவும், எனவே மகாசங்கத்தினரை விமர்சிப்பது ஏற்புடையதா? என்றும் எழுப்பப்பட்டுள்ள கேள்விக்கு அளித்திருக்கும் பதிலிலேயே சி.வி.விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு –

எனது கருத்துக்கள் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன என நான் கருதவில்லை. மாறாக, அவை நேர்மறையான சூழ்நிலையொன்றையே தோற்றுவித்திருக்கின்றன. குறிப்பாக அரசியலில் பௌத்த தேரர்களின் வகிபாகத்தின் ஏற்புடைமை தொடர்பாகப் பல சிங்கள பௌத்தர்கள் கேள்வியெழுப்ப ஆரம்பித்திருக்கின்றார்கள்.

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு அரசியல் விவகாரங்களில் பௌத்த தேரர்களால் மேற்கொள்ளப்படும் தலையீ– டுகளே கார ணம் என்பதே எனது நிலைப்பாடாகும்.

வடக்கு, கிழக்கு– வாழ் தமிழ்மக்களின் பிரச்சினைகள் என்னவென்பதைக் கண்டறிவதற்கு ஆங்கிலம் அல்லது தமிழ்மொழி பேசக்கூடிய பௌத்த தேரர்கள் தமிழ்த் தலைவர்களுடன் கலந்துரையா டுகின்றமை இன்றியமையாததாகும்.

போராட்டங்களில் ஈடுபடும் தேரர்களுக்கு அதிகாரப் பரவலாக்கத்துக்கும் அதிகா ரப்பகிர்வுக்கும் இடையிலான வேறுபாடும் ஒற்றையாட்சி அரசமைப்புக்கும் கூட் டாட்சி அரசமைப்புக்கும் இடையிலான வித்தியாசமும் தெரியவில்லை. அதுமாத்திரமன்றி அவர்களது தாய்மொழியின் வரலாறுகூட அவர்களுக்குத் தெரியாது. இலங்கையின் இனப்பிரச்சினைக்கானதீர்வில் குழப்பம் விளைவிக்கவேண்டிய தேவை அரசியல்வாதிக்கு இருக்குமாயின், அதற்குரிய உடனடி ஆதரவை பௌத்த தேரரிடமிருந்து இலகுவாகப் பெறமுடியும்.

'குறித்த நபர் நாட்டைப் பிளவுபடுத்த முற்படுகின்றார்' அல்லது 'குறித்த நபர் விடுதலைப்புலிகள் உறுப்பினர்' அல்லது 'குறித்த நபர் இந்தியாவின் கைப்பொம்மை' போன்றவிடயங்களைமாத்திரம் அவர்களிடம் கூறினால் போதுமானதாகும். உடனே அவர்கள் காவி உடையுடன் வீதிக்கு இறங்கிவிடுவார்கள். அவர்கள் உண்மை நிலைவரத்தைப் புரிந்துகொள்ளாமல் 'சீன மத்தாப்பூ' போன்று உடனடியாக வெடித்துவிடுவார்கள் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

# சுற்றுலாவிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தப் புதிய செயலி

சுற்றுலாப் பயணிகளுக்கு அவசியமான தகவல்களை வழங்குவதுடன் அவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையிலான சுற்றுலாத்துறை சார் செயலி ஒன்றை வடிவமைப்பதற்கு இலங்கை திட்டமிட்டுள்ளது.

அந்தச் செயலியில் முக்கியமாக 7 மொழிகளில் அவசியமான அனைத்துத் தகவல்களும் உள்ளடக்கப்படும் அதேவேளை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை உள்ளிட்ட முக்கிய கட்டமைப்புக்களின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள ஓட்டோக்களின் விவரங்களும் சேர்க்கப்படவுள்ளது.

சுற்றுலாப்பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அதேவேளை, இலங்கையில் அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ளக்கூடிய இடங்கள் தொடர்பான அனைத்துத் தகவல்களும் அந்தச் செயலியில் உள்ளடக்கப்படுமென இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அதேபோன்று கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான நடைமுறைகள் பற்றிய விவரங்களும் அந்தச் செயலியில் உள்ளடக்கப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சுற்றுலாத்துறைசார் செயலி இம்மாத இறுதியில் வெளியிடப்படுமெனவும், இதன் மூலம் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் செயன்முறை மேலும் இலகுபடுத்தப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# மந்திரிமனைக்குள் நுழையவேண்டாம்!

*நல்லூரில் அமைந்துள்ள மந்திரிமனைக்குள் நுழையவேண்டாம் என்ற அறிவித்தல் தொல்பொருள் திணைக்களத்தால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.*

*யாழ்ப்பாணம் இராசதானியை ஆண்ட சங்கிலிய மன்னனது மந்திரிமனை நல்லூரில் சட்டநாதர் சிவன் ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ளது.*

*அந்தக் கட்டடம் உடைந்து விழும் நிலையில் உள்ளது. அதற்கு முட்டுக்கொடுத்து கம்பிகள் நாடப்பட்டுள்ளன. இதனால் அதற்குள் யாரையும் நுழையவேண்டாம் என்று தொல்பொருள் திணைக்களம் அறிவித்துள்ளது.*

# சமையல்காரர்களை ஆஸி.க்கு ஏற்றுமதி செய்யும் இலங்கை

## அமைச்சர் மனு நாணயக்கார

ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய விமான சேவை வழங்குநரான டெனாற்றா குழுமம், இலங்கையில் இருந்து சமையல்காரர்களை வேலைக்கு அமர்த்தவுள்ளது.

இந்தத் தகவலை இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சர் மனுநாணயக்கார தெரிவித்துள்ளார்.



சமீபத்தில் டெனாற்றா குழுமப் பிரதிநிதிகள் அமைச்சருடன் நடத்திய சிறப்புக் கலந்துரையாடலில் இது தொடர்பாக அமைச்சரிடம் கூறப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் வேலை வாய்ப்புக்காக இலங்கை இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து ஆட்சேர்ப்பு செய்வதற்கும் அவர்கள் தயாராக உள்ளனர். மேலும் 12 இலங்கை இளைஞர்கள் ஏற்கனவே டெனாற்றா குழுமத்தில் சமையல்காரர்கள் என்ற பிரிவின் கீழ் வேலைகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேலும் அவர்கள் ஆஸ்திரேலியா, இலங்கை வெளிநாட்டு சேவைகளில் பணியமர்த்தப்படுவார்கள் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

வேலைவாய்ப்பு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளத் தயாராக இருப்பதாக நேற்று (திங்கட்கிழமை) அமைச்சரிடம் அறிவித்துள்ளனர்.

அத்துடன், இலங்கையின் இளைஞர் யுவதிகளுக்கு அவர்களின் தொழில் தேவைகளுக்கு ஏற்ப பயிற்சியளித்து அவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும், பயிற்சி பெற்ற நிபுணருக்கான வேலை வாய்ப்புகள் ஏராளமாக உள்ளதாகவும் டெனாற்றா குழுமத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர் என அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டதன் பின்னர் சுற்றுலாத்துறை தொடர்பான பயிற்சி நிறுவனங்களுடன் பேச்சு நடத்தி இளைஞர்களுக்கான பயிற்சி வாய்ப்புகளை தயார்ப்படுத்துவோம் என அமைச்சர் தெரிவித்தார்.

அவர்களின் ஆங்கில மொழித் திறன்கள் மற்றும் இலங்கையிலுள்ள தொழில் முறை சமையல்காரர்களுக்கு கூட ஆங்கில மொழி புலமை இல்லை, அதனால் அவர்கள் ஆஸ்திரேலியாவில் பல வேலை வாய்ப்புகளை இழக்கிறார்கள் எனக் குறிப்பிடப்படுகின்றது.

# எழுத்துமூல அறிவிப்பு எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை!

## கட்சியில் இருந்து நீக்கியமை குறித்து பீரிஸ்

பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பதவியில் இருந்து தம்மை நீக்கியதாக எழுத்துமூல அறிவிப்பு எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இன்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், அவ்வாறான அறிவித்தல் கிடைத்தால் அதற்குத் தேவை– யான நடவடிக்கைகளை எடுக்கத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் உயர் நீதிமன்றம் வழங்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பில் ஜனநாயகம் நிலை நாட்டப்பட்டுள்ளது என்றும் அதற்கு தலை வணங்குவதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை அரசாங்கம் விரும்பாமலோ தேர்தலை சந்திக்க வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

# ஏற்புடைய அணுகுமுறை அல்ல

**கருத்துச் சுதந்திரத்திற்கு நாம் எதிரானவர்கள் இல்லை. ஆனால், அதன் பெயரால் விசமத்தனமான ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை மேற்கொண்டு இயல்பு நிலைமைகளைக் குழப்புவதும், முறைப்படியாக முன்னெடுக்கப்படும் சர்வதேச கலந்துரையாடல்களைக் குழம்புவதும் பொருத்தமற்றதாகும்.**

**ஆகவே அவ்விதமான நடவடிக்கைகள் தொடருமாக இருந்தால் நாம் நிச்சயமாக, கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தள்ளப்படுவோம். அவ்விதமான திட்டமிட்ட நடவடிக்கைகளுக்குஎதிராக அரசு நிச்சயமாக கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுக்கும்.**

**இப்படித் தெரிவித்திருக்கிறார் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க. இன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அந்தக் கருத்தைத் தெரிவித்த பின்னர் கொழும்பில் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் மீது கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதலும் நீர்த்தாரைத் தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது. இந்தக் களேபரத்தில் சிலர் காயங்களுக்குள்ளாகி இருக்கின்றனர் என்றும் செய்திகள் வருகின்றன.**

**ஆர்ப்பாட்டக்காரர்களை, போராட்டக்காரர்களை, பேரணிகளை கொழும்பின் மையப் பகுதிக்குள் அதாவது அரச தலைவர் மாளிகை, செயலகம் அமைந்துள்ள இடத்திற்கோ காலி முகத் திடல் பகுதிக்கோ செல்ல அனுமதிப்பதில்லை. அதற்கு முன்பே அவர்களைத் தடுத்து நிறுத்தி தாக்கிச் சிதறடித்துவிடுவது என்கிற உத்தியைத்தான் ரணில் விக்கிரமசிங்க இப்போது பினபற்றி வருகின்றார்.**

**கோட்டாபய ராஜபக்ச தனக்கு வெகு அருகில் ஆர்ப்பாட்டக்காரர்களை நெருங்கவிட்டதே அவரது தோல்விக்கும் அவர் விரட்டியடிக்கப்படுவதற்கும் காரணம் என்று கருதும் ரணில், தன்னை நெருங்க போராட்டக்காரர்களை அனுமதிப்பதில்லை என்கிற உத்தியோடு செயற்படுகின்றார். அதற்கு முன்னாள் காவல்துறையினரையும் பின்னால் ஆயுதப் படையினரையும் நிறுத்தி வைத்துக் கவசப் பாதுகாப்பை அவர் உருவாக்கப் பார்க்கின்றார்.**

**மிக வீரியமான அதிக எண்ணிக்கையைக் கொண்ட மக்கள் கூட்டத்தின் முன்பாக இந்த உத்தி பயன்படுமா என்பது கேள்விக்குரியது. நீண்ட காலத்திற்கும் இதே உத்தியுடன் அவர் பயணிக்க முடியுமா என்பதும் கேள்விக்குரியதே. தன்னைச் சுற்றி ஒரு பாதகாப்பு வளையத்தை உருவாக்கி வைத்திருப்பதால் மக்களுக்களின் அடிப்படை உரிமைகளையும் அரசியல் உரிமைகளையும் நசுக்கி மக்களாட்சியைக் கேலிக்குள்ளாகி அவர் நடந்துகொள்வது ஏற்புடையதல்ல.**

**அமைதியான போராட்டங்கள் மீதான தாக்குதல்களை அவரது ஆட்சி நிறுத்தவேண்டும் என்கிற பன்னாட்டு அமைப்புக்களின் கண்டனங்களும் வெளிநாடுகளின் அக்கறையும் அதிகரித்து வரும் நிலையில்தொடர்ந்து இதேவிதமாகரணில்விக்கிரமசிங்க அடக்குமுறையைப் பயன்படுத்துவதும், அதை நாடாளுமன்றத்தில் நியாயப்படுத்துவதும் தவறானது.**

**இந்த அணுகுமுறையைக் கைவிட்டு அவர் மீண்டும் மக்களாட்சியின் மாண்புக்குத் திரும்ப வேண்டும்.**

# பலமான அரசை அமைக்கின்ற தேர்தலுக்கு ரணில் செல்வார்!

## சான்திநி கோன்கஹறகே நம்பிக்கை

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை பெற்றுக்கொண்டு நாட்டை ஆட்சி செய்யவே ரணில் விக்ரமசிங்க விருப்புகிறார். அதனால் தனி அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள விரைவாக தேர்தலுக்கு செல்வார்.

ஆனால் நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையில் அதனை செய்ய முடியாமல் இருக்கிறது. அதற்கு குறிப்பிட்டதொரு கால அவகாசம் வழங்கவேண்டும் என ஐக்கிய தேசிய கட்சி லக்வனிதா அமைப்பின் தலைவி சான்திநி கோன்கஹறகே தெரிவித்தார்.



ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பத் தேவையான நடவடிக்கைகளையே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கொண்டு வருகிறார்.

அவர் பிரதமராகப் பதவி ஏற்றதில் இருந்து பொருளாதாரத்தை எவ்வாறு தலைதூக்கச்செய்வது என்ற சிந்தனையுடன் பல வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வந்தார்.

அதன் பயனாகவே கடந்த 7 மாதங் களுக்கு முன்னர் நாட்டில் இருந்து வந்த வரிசை யுகத்துக்கு தீர்வுகாண முடியுமாகியது. அதனை நாங்கள் கண் முன்னே காண்கிறோம். அதேபோன்று பொருள்களின் விலையேற்றம் தொடர்பான பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண அவர் படிப்படியாக நடவடிக்கை எடுத்து வருகிறார். இவ்வாறான நிலையில் தேர்தல் ஒன்றுக்கு செல்வதால், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப இதுவரை மேற்கொண்டுவந்த திட்டமிட்ட நடவடிக்கைகள் பாதிக்கப்படும்.

நாட்டின் செலவினங்களுக்கு நிதி ஒதுக்குவதற்கு விசேட ஒழுங்குவரிசை ஒன்றைக் கடைப்பிடித்தே நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது.

அவ்வாறானதொரு நடவடிக்கையை பிற்பற்றி செயற்பட்டதாலே பொருளாதார நெருக்கடி நிலைமையை ஓரளவேனும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியுமாகி இருக்கிறது. எமது நாடு தொடர்ந்தும் யாசகம் கேட்கும் நிலையில் இருக்க முடியாது. முன்னேற்றமடைய வேண்டும். அதற்கான வேலைத்திட்டங்களையே ஜனாதிபதி மேற்கொண்டு வருகிறார்.

அத்துடன் நாட்டை நிர்வகிக்க ரணில் விக்ரமசிங்கவுக்கும் பலம்மிக்க அரசாங்கம் ஒன்று தேவை. தொடர்ந்து இந்த நிலையில் செயற்பட முடியாது.

அதனால் இன்னும் சில மாதங்களில் அதற்குத் தேவையான தேர்தலை நடத்து–வார். மக்களின் ஜனநாயக உரிமைகளை ஒருபோதும் அவர் பறித்தவரல்லர்.

ஆனால் தற்போது மக்களை வாழ வைக்கவே நடவடிக்கை எடுத்து வருகிறார். ரணில் விக்ரமசிங்கவின் சூசகமான வேலைத்திட்டங்களால் எமது அந்நிய செலாவணி அதிகரித்து வருகிறது.

அதனால்நாங்கள்எடுத்தகடன்களைத் திருப்பிக்கொடுக்க முடியுமான நிலை ஏற்பட்டுவருவதாக மத்திய வங்கி ஆளு நர் தெரிவித்திருக்கிறார். இதுஎமக்குப்பெருமையாகும். அதனால் எதிர்க்கட்சியினர் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால் இவர்கள் மக்களின் எதிர் குகாலம், நாட்டின் பொருளாதாரம் தொடர்பாக சிந்திப்பவர்களல்லர். நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவோ மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுக்கவோ எந்த வேலைத்திட்டத்தையும் இதுவரை இவர்கள் முன்வைக்கவில்லை. – என்றார்.

# இருதயத்தின் இரண்டு அறைகளை போலவே தமிழர்களும், முஸ்லிம்களும் வாழ வேண்டும்

## பிரதேச செயலாளர் ஜெகராஜன் வலியுறுத்து

(த. தர்மேந்திரா)

இதயத்தின் இரண்டு அறைகளை போல தமிழர்களும், முஸ்லிம்களும் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்று காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன் தெரிவித்தார்.



இனங்களுக்கு இடையிலான சமூக நல்லிணக்கத்தை உருவாக்குவோம் என்கிற மகுடத்திலான ஒன்றுகூடல் மற்றும் பரிசளிப்பு வைபவம் மாளிகைக்காடு கிழக்கு சக வாழ்வு சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் செயலாளர் ஆர். எம். தன்ஸீம் தலைமையில் மாளிகைக்காடு அல் ஹுசைன் வித்தியாலயத்தில் திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதில் காரைதீவு சிவசக்தி குரு குடைச்சாமி சர்வமத பீடத்தின் தலைவர் ஜீவாகரன் சுவாமிகள் அடங்கலான ஆன்மீகதலைவர்கள், காரைதீவுபொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி செல்டன் ஜெகத், அல் ஹுசைன் வித்தியாலய பிரதி அதிபர் ஏ.எல்.எம். நளீம், காரைதீவு மனித அபிவிருத்தி ஸ்தாபன உத்தியோகத்தர் எம்.எம்.ஜலீல், காரைதீவு பிரதேச செயலகத்தின் சகவாழ்வு அபிவிருத்தி உத்தியோகத் தர் தணிகைச்செல்வி, கிழக்கு இளைஞர் கள் அமைப்பு தலைவர் ஆர்.எம். தாணீஸ், மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி சங்க தலைவர் ஏ.எல். இந்தியாஸ் அடங்கலான பேராளர்களும் கலந்து கொண்டனர்.

இனங்களுக்கு இடையிலான சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தி பாடசாலை மாணவர்களுக்கு இடையில் மாளிகைக் காடு கிழக்கு சகவாழ்வு சங்கத்தால் நடத்தப்பட்ட ஓவிய போட்டியில் வெற்றி பெற்ற சாதனை மாணவர்கள் பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கி பாராட்டப்பட்டனர்.

பிரதேச செயலாளர் ஜெகராஜன் இங்கு மேலும் தெரிவித்ததாவது:

இதயத்தின் இரு அறைகளை போல தமிழர்களும், முஸ்லிம்களும் ஒன்றுபட்டு வாழ்ந்த காலம் இருந்தது.பிரிக்கப்பட முடியாத அளவுக்கு ஒன்றித்து வாழ்ந்தார்கள்.

ஆனால் தேங்காய் பூவும், பிட்டும் போல என்று பிழையான உதாரணத்தை கையாண்டதன் பயனோ என்னவோ இன்று பிரிந்து நிற்கின்றார்கள்.

எமது மூதாதையர்கள் இனங்களுக்கு இடையில் கட்டி காத்து வைத்திருந்த ஒற்றுமை இன்றைய சந்ததியினருக்கு இடையில் கட்டி எழுப்பப்பட வேண்டும்.

மதத்துக்காக வாதாடுகின்றார்கள். மதத்துக்காக அடிபடுகின்றார்கள். ஆனால் மதங்கள் காட்டுகின்ற பாதையில் நடக்கின்றார்களா? எல்லா மதங்களுமே நல்லிணக்கத்தை யும், சகவாழ்வையும் தான் போதிக்கின்றன.

தென்னிலங்கையில் அழிவு நடந்தது. முள்ளிவாய்க்காலில் அழிவு நடந்தது. அவற்றின் வலியை நம்மவர்கள் புரிந்து கொள்ள முடியாமல் இருந்தது. நமக்கு நமக்கு என்று வருகிறபோதுதான் வலி புரிகின்றது. இந்நிலை மாற வேண்டும்.

சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தம் 1964 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டது. நாடற்றவர்கள் என்று இந்திய வம்சாவளி தமிழர்கள் பிரகடனம் செய்யப்பட்டனர். இந்தியவம்சாவளிதமிழர்களை அடையாளம் காண்பதற்காகவே தான் தேசிய அடையாள அட்டை முறைமை கொண்டு வரப்பட்டது என்பது வரலாறு.

நாம் இன, மத, பிரதேச ரீதியான சிந்தனையில் இருந்து விடுபட வேண்டும். இலங்கையர்களாக ஒன்றுபட வேண்டும். இன ரீதியாக தேசிய நல்லிணக்கம் ஏற்பட்டால் அன்றி எமது நாடு வளர்ச்சி அடைய முடியாது.

கடந்த காலங்களில் பிரிந்து நின்றதன் பலன்களையே இன்று நாம் பொருளாதார ரீதியாகக்கூட அனுபவிக்கின்றோம். பிரித்தானியாவிடம் இருந்து இலங்கை 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தது. ஆனால் நாம் 75 வருடங்களாக பின்னடைந்து காணப்படுகின்றோம். இந்நிலை மாற வேண்டும். இந்நிலையை மாற்ற வேண்டும்.

# மூவின மக்களையும் அரவணைத்து நடக்கின்ற கனவான் கிழக்கு ஆளுநராக வருதல்வேண்டும்

## காரைதீவு ஜீவாகரன் சுவாமி வலியுறுத்து

(த. தர்மேந்திரா)

மூவின மக்களையும் அரவணைத்து நடக்கக்கூடிய கனவான் ஒருவரே கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும் என்று காரைதீவு சிவசக்தி குரு குடைச்சாமி சர்வமத பீடத்தின் நிறுவுநரும், தலைவருமான ஜீவாகரன் சுவாமி தெரிவித்தார்.

முழு நிலை நாளையொட்டி சர்வமத பீடத்தில் செவ்வாய்க்கிழமையும் திங்கட்கிழமையும் விசேட பூசைகள், யாகங்கள், பிரார்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவற்றின் நிறைவில் செய்தியாளர்களிடம் கருத்துகூறிய ஜீவாகரன் சுவாமி, எல்லா மக்களையும் அரவணைத்து நடக்கக் கூடிய கனவான் கிழக்கு மாகாண ஆளுநராக வரவேண்டும், அவர் மூலமாக இந்த மாகாணத்தின் மக்கள் அனைவருக்கும் நல்லவை நடக்கவேண்டும், இனம் அல்ல மனம்தான் முக்கியம், நாடு செழிக்க வேண்டும் இவற்றுக்காகவே எல்லா மக்களுக்குமாக விசேட பூசைகள், யாகங்கள், பிரார்த்தனைகள் மேற்கொண்டோம் என்றார்.






# சீனப் பொருளாதாரத்திற்கு 2022 பெரும் பின்னடைவு

1970ஆம் ஆண்டுக்குப் பின் 2022ஆம் ஆண்டு சீனப் பொருளாதாரத்திற்கு இரண்டாவது மோசமான ஆண்டாக இருந்தாகத் தகவல் வெளியாகியுள்ளது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் (சிசிபி) உயர்மட்ட அரசியல் தலைவர்களின் கூட்டம் மார்ச் 4ஆம் திகதி தொடங்கியது. இரண்டு அமர்வுகளாக நடக்கும் இந்தக் கூட்டம் இரண்டு வாரங்கள் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், சீன அரசு 2023ஆம் ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியான ஜிடிபி இலக்கை கடந்த ஆண்டுகளைவிடக் குறைவாக அறிவித்துள் ளது. அதேநேரத்தில் இராணுவ செலவீனங்களை 7 சதவீதம் அதிகரித்துள்ளது.

”1970ம் ஆண்டுக்குப் பின் சீனப் பொருளாதாரத்திற்கு 2022ஆம் ஆண்டு இரண்டாவது மோசமான ஆண்டாகும். கடுமையான கட்டுப்பாடுகள், பூஜ்ஜிய கொவிட் கொள்கை காரணமாக 2020ஆம் ஆண்டும் பொருளாதாரம் மிகவும் பின்தங்கி இருந்தது” என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

முன்னதாக, உயர்மட்ட அரசியல் குழுக் கூட்டத்தில், மார்ச் 5ஆம் திகதியுடன் பதவிக்காலம் நிறைவடையும் சீன பிரதமர் லீ கெகியங், தனது கடைசி அரசின் வரவு செலவு அறிக்கையை தாக்கல் செய்தார். அப்போது, இந்த ஆண்டு சீனாவின் உள்நாட்டு உற்பத்தி அளவு 5 சதவீதமாக நிர்ணயிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார். இது எதிர்பார்க்கப்பட்ட அளவை விட குறைவு.

# உள்ளாடை விளம்பரங்களில் பெண்கள் நடிப்பதற்குத் தடை

## சீன அரசின் முடிவால் சர்ச்சை

சீனாவில் பெண் மாடல்கள் உள்ளாடை விளம்பரங்களில் நடிப்பதற்கு அந்த நாட்டு அரசு விதித்துள்ள குறிப்பிட்ட தடையால் அங்கு சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

சீனாவில் குடிமக்களுக்கு ஏராளமான கட்டுப்பாடுகள் உள்ளன. பொது இடங்களில் போராட்டம் நடத்த தடை, அரசுக்கு எதிரான கருத்துக்கு தடை, சமூக வலைதளங்களுக்குத் தணிக்கை உள்ளிட்ட ஏராளமான கட்டுப்பாடுகள் உள்ளன. இதன் காரணமாக பொதுமக்களிடம் சீன அதிபர் நாளுக்கு நாள் எதிர்வினைகளைச் சந்தித்து வருவதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், புதியதொரு கட்டுப்பாட்டை பெண்களுக்கு சீன அரசு விதித்துள்ளது. அதாவது, மாடலிங்கில் பணி செய்யும் பெண்கள் உள்ளாடை தொடர்பான விளம்பரங்களில் நடிப்பதற்கும், லைவ் ஸ்ட்ரீமிங் செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் சீனாவில் உள்ளாடை விளம்பரங்களில் பெண்களுக்கு பதிலாக ஆண்கள் தேர்வு செய்யப்பட்டு வருகின்றனர்.

இது குறித்து உள்ளாடை நிறுவனம் ஒன்று கூறும்போது, எங்களுக்கு வேறு வழியில்லை. இதனாலேயே சமீப நாட்களாக ஆண் மாடல்களை உள்ளாடை விளம்பரங்களில் பயன்படுத்தி வருகிறோம் என்று தெரிவித்துள்ளது.

சீனாவை பொறுத்தவரை அங்கு லைவ் ஸ்ட்ரீமிங் காட்சிகளுக்கான வர்த்தகம் அதிகம் என்று அங்குள்ள வர்த்தக நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. இதனாலேயே லைவ் ஸ்ட்ரீமிங்கை புறக்கணிக்காமல் ஆண்கள் பலர் தற்போது பெண்கள் பயன்படுத்தும் உள்ளாடைகளுக்கு மாடல்களாக நடித்து வருவதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்கிடையே, பெண்களுக்கு பதிலாக ஆண்கள் நடிக்கும் விளம்பரங்கள் டிக்டாக்கில் ட்ரெண்ட் ஆகி வருகிறது. ஆபாச ரீதியான வீடியோக்களை தடுக்கவே இந்த தடை கொண்டுவரப்பட்டதாக சீன அரசால் கூறப்பட்டுள்ளது. இந்த நிலையில், இது பெண்களின் வேலை வாய்ப்பைப் பறிக்கும் செயல் என்று பெண்கள் நல அமைப்புகள் குரல் எழுப்பி வருகின்றன.



# தயாராகவே இருக்கிறோம் வடகொரியா எச்சரிக்கை

அமெரிக்கா மற்றும் தென் கொரியாவிற்கு எதிராக பெரிய அளவிலான நடவடிக்கையை எடுக்கத் தயாராக இருப்பதாக வடகொடிய அதிபர் கிம்மின் சகோதரி எச்சரித்துள்ளார்.

கொரிய தீபகற்பத்தில் அமெரிக்கா தென்கொரிய படைகள் கடந்த சில நாட்களாக இராணுவப் பயிற்சிகளை மேற்கொண்டன. மேலும், இம்மாத இறுதியில் இரு நாடுகளும் மிகப் பெரிய அளவிலான இராணுவ பயிற்சிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளி வருகின்றன. இந்த நிலையில், கிம்மின் சகோதரி அமெரிக்கா, தென் கொரியாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து கிம் யோ ஜாங் நிகழ்வு ஒன்றில் பேசும்போது, அமெரிக்கப் படைகள் மற்றும் கைப்பாவை தென் கொரிய இராணுவத்தின் அமைதியற்ற இராணுவ நகர்வுகளை நாங்கள் கண்காணித்து வருகிறோம். இதற்காக எந்த நேரத்திலும் விரைவான பெரிய அளவிலான நடவடிக்கையை எடுக்கத் தயராக இருக்கிறோம் என்று தெரிவித்தார்.

முன்னதாக, கடந்த ஆண்டு நீங்கள் அடுத்த நான்கு வருடங்களுக்கு அமைதியாக உறங்கவேண்டும் என்று நினைத்தால் எங்களைச் சீண்டாமல் இருப்பது நல்லது என்று ஜோ பைடன் அரசுக்கு கிம் யோ ஜாங் எச்சரிக்கை விடுத்திருந்தது நினைவுகூரத்தக்கது.

வடகொரிய அதிபர் கிம்மின் சகோதரி கிம் யோ ஜாங், கிம்முக்கு அடுத்து சக்தி வாய்ந்த நபராக அந்நாட்டில் அறியப்படுகிறார்.

அதிபர் கிம்மின் சொந்தத் தங்கையான கிம் யோ ஜாங் அந்நாட்டின் அதிகாரம் படைத்த அமைப்பான வடகொரியத் தொழிலாளர் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினராகவும், முக்கியமான அரசியல் தலைவராகவும் உள்ளார்.

கிம் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காலத்திலிருந்தே, தன்னுடைய சகோதரி கிம் யோ ஜாங்குக்கு அரசியலில் முக்கியப் பொறுப்புகள் வழங்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# மாணவிகளுக்கு விசம் கொடுத்த குற்றவாளிகளை தூக்கிலிடுங்கள்

## ஈரான் மதத் தலைவர் கொமேனி வலியுறுத்து

பள்ளி மாணவிகளுக்கு விசம் வைத்த விவகாரம் மன்னிக்க முடியாதது என தெரிவித்துள்ள ஈரான் மத தலைவர் அயத்துல்லா அலி கொமேனி, வேண்டுமென்றே விசம் வைக்கப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டால் குற்றவாளிகளுக்கு தூக்குத்தண்டனை விதிக்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள கோம் பகுதியில் பள்ளி செல்லும் மாணவிகளுக்கு கடந்த மூன்று மாதங்களாக தொடர்ந்து உடல்நலம் பாதிக்கப்பட்டு வந்தது. வயிற்றுவலி, தலைவலி, வாந்தி, மூச்சுவிடுவதில் சிரமம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட மாணவிகளில் பலர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். மருத்துவப் பரிசோதனையில் அவர்களின் உடலில் நஞ்சு இருந்தது தெரிய வந்தது. மாணவிகளுக்கு விசம் வைக்கப்பட்டதை ஈரான் கல்வி அமைச்சகமும் உறுதி செய்தது. உணவு அல்லது காற்றின் மூலமாக விசம் கொடுக்கப்பட்டிருக்கலாம் என தகவல் வெளியாகி உள்ளது.

இதற்கு மத அடிப்படைவாதிகளே காரணம் என்றும், மாணவிகள் கல்வி பயில்வதை தடுக்கும் நோக்கில் விசம் கொடுக்கப்பட்டதாகவும் ஊடகங்களில் செய்தி வெளியாகியது. இதனைத் தொடர்ந்து இந்த விவகாரம் சர்வதேச அளவில் விவாதிக்கப்பட்டது. இந்த நிலையில் இந்த விவகாரம் குறித்துப் பேசிய ஈரான் மதத் தலைவர் அயத்துல்லா அலிகொமேனி, மாணவிகளுக்கு விசம் கெடுக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக அதிகாரிகள் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். வேண்டுமென்றே மாணவிகளுக்கு விசம் கொடுக்கப்பட்டிருந்தால் இந்த மன்னிக்க முடியாத குற்றத்தைச் செய்த குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை விதிக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, இளம்பெண் மாஷா அமினியின் மரணத்தைத் தொடர்ந்து ஈரானில் எழுந்த ஹிஜாப் எதிர்ப்பு போராட்டம் சர்வதேச அளவில் பேசுபொருளானது. இந்த நிலையில், பள்ளி மாணவிகளுக்கு விசம் வைக்கப்பட்ட விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

# பாக்முத் நகருக்கான மோதல்கள் தீவிரம்

## ரஷ்யா – உக்ரேன் இரு தரப்புகளுக்கும் ஆயுத விநியோகத்தில் சிக்கல்

உக்ரைனின் பாக்முத் நகரைக் கைப்பற்றுவதற்கான தாக்குதலை ரஷ்யா திங்கள்கிழமை தீவிரப்படுத்தியது. அந்த நகரைப் பாதுகாப்பதற்காக உக்ரைன் படையினரும் தீர்க்கமாக சண்டையிட்டு வருகின்றனா.

இரு நாட்டுப் படையினரும் தொடாந்து சண்டையிடுவதற்கான குண்டுகள், தோட்டாக்கள் உள்ளிட்ட ஆயுதங்களைப் பெறுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாக்முத்தைக் கைப்பற்றுவதற்காக போரிட்டு வரும் ரஷ்யாவின் தன்னார்வப் படையான வாக்னா குழுவின் தலைவா யேவ்கேனி ப்ரிகோஷின் கூறுகையில், தங்களது படையினருக்கு போதிய ஆயுத உதவிகள் கிடைப்பதில்லை என்று குற்றம் சாட்டினார்.

அது ரஷ்ய அரசின் ராஜீய ரீதியிலான முடிவாகவோ, அல்லது துரோகமாகவோ இருக்கக்கூடும் என்று அவா கூறியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையே, பாக்முத் நிலவரம் தொடாபாக இராணுவ உயரதிகாரிகளுடன் அவசரக் கூட்டம் நடத்திய உக்ரைன் அதிபர் வொலோதிமீா ஸெலென்ஸ்கி, அங்கு நடைபெறும் சண்டையில் படையினருக்கு ஆயுத விநியோகத்தை தொடாவது குறித்து ஆலோசனை நடத்தினார்.

இறுதியில், நகரை தொடாந்து பாதுகாக்க இராணு–வத்துக்கு உதவி அளிப்பது என்று முடிவெடுக்கப்பட்டது.

போதிய அளவில் ஈராணுவ முக்கியத்துவம் அற்றது என்று கூறப்படும் பாக்முத் நகரைக் கைப்பற்றுவதில் ரஷ்யா காட்டி வரும் உத்வேகமும், அந்த நகரைப் பாதுகாக்க உக்ரைன் காட்டி வரும் தீவிரமும் பாதுகாப்பு நிபுணாகளிடையே வியப்பை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

அந்த நகருக்கு உளவியல் ரீதியில் மட்டுமே முக்கியத்துவம் இருப்பதாக நிபுணாகள் தெரிவிக்கின்றனர்.

பாக்முத்தைக் கைப்பற்றுவதன் மூலம் போரில் வெற்றி கண்டு வருவதாக ரஷ்ய படையினருக்கும், ரஷ்ய மக்களுக்கும் உற்சாகத்தை ஏற்படுத்த அந்த நாட்டு அதிபா விளாடிமீா புடின் கருதுகின்றார் என்று கூறப்படுகிறது.

அதேபோல், பாக்முத் நகரைப் பாதுகாப்பதன் மூலம் தங்கள் மீது படையெடுத்து வந்துள்ள ரஷ்யாகளுக்கு எதிரான தங்களின் உறுதியான நிலைப்பாட்டை உணாத்த அதிபர் வொலோதிமீா ஸெலென்ஸ்கி விரும்புகிறார் என்று கருதப்படுகிறது. ஆனால், தங்களது நோக்கத்தை பூர்த்தி செய்வதற்காக இரு தரப்புமே அதிக விலை கொடுப்பதாக நிபுணர்கள் கூறுகின்றனா.

கடுமையான குளிருக்கு இடையே பாக்முத்தில் நடைபெற்று வரும் தீவிர சண்டையில் ஆயிரக்கணக்கானவாகள் காயமடைந்தும் உயிரிழந்தும் வருகின்றனர் என்று சமூக வலைதளங்களில் வெளியாகும் பதிவுகள் தெரிவிக்கின்றன.

உயிர்ச் சேதத்தைத் தவிர்ப்பதற்காக அந்த நகரிலிருந்து பெரும்பாலான பொதுமக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். எனினும், இன்னும் ஆயிரக்கணக்கானவாகள் பாக்முத்திலேயே உள்ளனர். அவாகள் போதிய உணவு, குடிதண்ணீர், மின்சார வசதிகளின்றி சுரங்க அறைகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனா.

இந்தச் சூழலில், பாக்முத் நகரைக் கைப்பற்றுவதற்காக ரஷ்யப் படையினா தங்களது தாக்குதலைத் தீவிரப் படுத்தியுள்ளனா.

தங்களுக்கு எதிராக உருவாக்கப்பட்ட நேட்டோ அமைப்பில், தங்களின் நெருங்கிய அண்டை நாடான உக்ரைன் இணைவது தங்களது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று ரஷ்யா கருதுகிறது. எனினும், நேட்டோவில் இணைவதற்கு வொலோதிமீா ஸெலென்ஸ்கி தலைமையிலான தற்போதைய உக்ரைன் அரசு விருப்பம் தெரிவித்தது.

அதையடுத்து, அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி படையெடுத்து, கிழக்கு மற்றும் தெற்கு உக்ரைனின் லுஹான்ஸ்க், டொனட்ஸ்க், கொசான், ஸபோரிஷியா ஆகிய பிரதேசங்களைக் கைப்பற்றியது.

அந்தப் பிரதேசங்களில் ஒன்றான டொனட்ஸ்கைச் சோந்த பாக்முத் நகரைக் கைப்பற்றுவதற்காக பல மாதங்களாகவே ரஷியப் படையினர் தாக்குதல் நடத்தி முன்னேறி வருகின்றனா.



# பிலிப்பைன்ஸில் நிலநடுக்கம்

*பிலிப்பைன்ஸில் இன்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. பிலிப்பைன்ஸின் சார்மரியானோவிலிருந்து தென்கிழக்கில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டடது.*

*சான்மரியானோவிலிருந்து தென்கிழக்கில் 4 கி.மீ தூரத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவில் 6.0 ஆகப் பதிவாகியுள்ளது.*

*இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து உடனடியாக எந்தவித தகவலும் வெளிவரவில்லை.*

*கடந்த ஆண்டு ஜூலை மாதம், வடக்கு பிலிப்பைன்ஸில் டோலோரஸ் அருகே 7.1 அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது.*

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.03.2023 இல் வெளியிடப்பெற்றது.